திசை
THISAI

**BOOKS AND MAGAZINES**

Wanted by Foreign Research Organisation books, magazines and pamphlets on all subjects pertaining to Sri Lanka.

Preference for publications in English published before 1948. Immediate payment. Please write in English giving details including name of author, year of publication and price expected to-

**ZODIAC ENTERPRISES LTD.**
227D, Galle Road, Colombo - 3 A 007

SRI LANKA MUSLIM ... COLOMBO

திசை 1 18-3-1989 சனிக்கிழமை விலை : ரூபா 3-50 முகம் 10

கருத்து வாக்கெடுப்பு

# மீண்டும் கறுப்பு ஜூலை உருவாகுவதற்கு வழிவகுக்குமா?

**வடக்கும் கிழக்கும் நிரந்தரமாக இணைக்கப் படுவதையிட்டு கிழக்கு மாகாண மக்களின் கருத்தை அறிவதற்கு யூலை 5 ஆம் திகதி, கிழக்கு மாகாணத்தில் கருத்து வாக்கெடுப்பு நடைபெறும் எனப் பழைய ஜனதிபதி பதவி விலகுமுன்னர் செய்த பிரகடனத்தால், பெரிய இரத்தக் களரி யூலை 1983 இல் போன்று ஏற்படுமோ என்ற அச்சம், மக்களிடையேயும் அரசியல் அவதானிகள் மத்தியிலும் இப்பொழுது உருவாகிவருகின்றது.**

பழைய ஜனதிபதி போட்ட 'முடிச்சு'க்களை 'சிக்'கறுப்பதில் புதிய ஜனதிபதி 'திக்கு முக்காடு'கின்ருர்.

இக் கருத்துவாக்கெடுப்பு, சிக்கல்மிக்க இத்தகையதோர் முடிச்சு.

இவ்வாக்கெடுப்பை குறிப்பிட்ட திகதியில் நடாத்திஞல், கிழக்கு மாகாணத்திலும், ஏனைய பகுதிகளிலும் இரத்தம் ஆருகப் பெருக்கெடுத்து ஓடக்கூடிய அபாயம் உண்டு. நடத்தாவிட்டால், ஜே. வி. பி. யின் கை மேலோங்கி, பிரச்சினை மேலும் சிக்கலாகி, அரசாங்கத்தைப் பெரும் சங்கடத்திற்குள்ளாக்கும். சிங்கள மக்களின் அதிருப்தியை அது எதிர் கொள்ள நேரிடும்.

தமிழர் இயக்கங்களைப் பொறுத்தவரை, இந்த வாக்கெடுப்பு தேவையற்ற ஒன்ருகும். வடகிழக்கு இணைப்பு நிரந்தரமானதாய் இருக்க வேண்டுமென்பதே அவர்களது நிலைப்பாடு.

இந்தப் பின்னணியில், முஸ்லிம் கொங்கிரசின் நிலைப்பாடு முக்கியத்துவம் பெறுகின்றது.

வாக்கெடுப்பைத் தவிர்க்கும் வகையில், இந்திய—இலங்கை ஒப்பந்தம் திருத்தப்படவேண்டும். இவ்வாறு செய்யப்படா

(12ஆம் பக்கம் பார்க்க)

## தர்மிஷ்டமும் பிரேமாவின் வறுமை ஒழிப்பும்

தூய வெண்ணிற ஆடையுடன் 'தர்மிஷ்ட'' என்ற வார்த்தையை உச்சரித்துக் கொண்டு 1977 ஆம் ஆண்டு அரியணை ஏறிஞர் ஜே. ஆர். ஆனல் அவராட்சியிலோ நாட்டில் செங்குருதி படர்ந்தது. ஜே. ஆர். கூறிய ''தர்மிஷ்ட'' அழகு மொழி போல, இன்று பிரேமா ஒரு புதிய மொழியாக "வறுமை ஒழிப்பு'' என்று கூறுகிருர்.

காலத்திற்குக் காலம் மக்களின் முன் இப்படி வசீகரமான வார்த்தையின் மூலம், ஏதோ திட்டங்களை முன்வைப்பது யு.என்.பி. இன் வழக்கம். 1965 ஆம் ஆண்டு பதவிக்கு வந்த டட்லி சேனநாயக்கா ''பசுமைப் புரட்சி'' என்ருெரு சுலோகத்தை முன்வைத்தார். உண்மையில் ''தர்மிஷ்டமும்'' ''பசுமைப் புரட்சியும்'' என்

(12ஆம் பக்கம் பார்க்க)

## தமிழரில் பழகிப் பெற்ற கொலைப் பயிற்சி

ஏறக்குறைய 10 ஆண்டுகளாக சிறிலங்கா இராணுவம் தமிழ்ப் பகுதிகளில் கொலை செய்யும் வித்தையில் ஸ்பெஷலைஸ் பண்ணியது. என்னதான் தியறிகளைப் படித்தாலும் பிறக்ரிக்கலுடன் படிப்பது போல் அது கைவராதென்பதால் தமிழ்ப் பகுதிகளில் சிறிலங்கா இராணுவம் பிறக்ரிக்கலுடன் படித்த படிப்பு, இன்று தென்பகுதியில் பெரிதும் பயன்படுவது போலத் தெரிகிறது.

பயன்படுகிறதோ இல்லையோ, கொலைவித்தைகளைக் கற்பதற்கான நடைமுறைப் பரிசோதனைப் பிராணிகளாக தமிழ் பேசும் மக்கள் இருந்தார்கள் என்பது மட்டும், உண்மை.

அதிர்ச்சி தரும் வேதனை மிகுந்த சம்பவங்கள் தென்பகுதியில் தொடர்ந்து நிகழ்கின்றன. உத்தியோகபூர்வ அறிவித்தலின்படி இவ் வருடத்தின் 72 நாட்க்ளில் 2000க்கும்

(12ஆம் பக்கம் பார்க்க)

## ராஜீவுக்கு வளரும் அமெரிக்க ஆதரவு

பஞ்சாப்பில் சீக்கியரின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு,ராஜீவ் காந்தி புதிய திட்டமொன்றை வரைந்துள்ளது அனைவரும் அறிந்ததே.

இத் திட்டம் பிரச்சினைக்கான சிறந்த தீர்வென்றும், இதனைத் தாம் வரவேற்பதாகவும் அமெரிக்க வெளியுறவு இலாகாத் தலைவர் கூறியதாக, இந்திய வானெலி தனது 12-3-89 செய்தியில் அறிவித்தது.

ஏஜென்சிச் செய்தியை மேற்கோள் காட்டிக் கூறிய இவ் வானெலிச் செய்தியில் மேலும் கூறப்பட்டதாவது; அமெரிக்காவின் இவ் வரவேற்பு இந்தியாவில் அதன் வணிகத் துறையிலான ஈடுபாட்டையும், வளர்ச்சியையும் கோடிட்டுக் காட்டுவதாகக் கூறியுள்ளது.

இந்தியாவில் 77 அமெரிக்க நிறுவனங்களின் முதலீடு உள்ளதாக, இந்திய உத்தியோகபூர்வ செய்தியொன்று கூறுகிறது.

சோழியன் குடுமி சும்மா ஆடாது.

## திசை முகம்

*''சுதந்திர ஒளியினில் மனங்குளி
அதன்வழி திசையெலாம் துலங்கவே''*

### விடிவு ஏற்படுமா?

*யுத்த நிறுத்தம் என்னும் யோசனை பலமாக அடிபடுகிறது.*

*ஈழத்தமிழ் மண்ணில் இது சாத்தியமாகுமா?*

*இலங்கை - இந்திய ஒப்பந்தத்தோடு சாத்தியமாகும் என தமிழ்மக்களால் எதிர்பார்க்கப்பட்ட யுத்த நிறுத்தமும் அமைதியும் இன்னும் இம்மண்ணில் காலூன்ருது அனுமன்வாலாய் நீண்டு கொண்டு தான் இருக்கிறது.*

*இது இன்னும் நீடிக்குமா? அல்லது முடிவுக்கு வந்து விடுமா?*

*இதற்கொரு முடிவு ஏற்படும் போன்ற அறிகுறிகள் தற்போது தென்படத் தொடங்கியுள்ளன.*

*தமிழக அரசியலில் கருணநிதியின் பிரவேசமும் மாகாணசபை முதல்வர் இந்நோக்கோடு சென்றவாரம் டில்லி சென்றமையும், ஈரோஸ், ரெலோ பிரதிநிதிகள் தமிழ்நாடு சென்றுள்ளமையும் இதைச் சாத்தியப்பட வைக்க நல்ல சந்தர்ப்பம்.*

*அதற்கேற்ருற் போல் கருணநிதி அவர்கள், எதுவித நிபந்தனையுமின்றி யுத்த நிறுத்தத்தை முன்வைத்தே போராட்டக் குழுக்களோடு பேசவேண்டும் என்று ராஜீவ்காந்தியிடம் அழுத்தியிருப்பதும், இதற்குப் பலமூட்டுவதாய் உள்ளது.*

*சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்வது தமிழ் மக்களையும், அவர்களது விமோசனத்தையும் விரும்புவோர் கடனகும்.*

*இறுதியாக வந்துள்ள இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்வோமா?*

### நெருக்கடி ஞானம்

*'எமது துன்பங்களுக்கும் தொல்லைகளுக்கும் காரணம் நாம் ஏனைய இனங்களுக்குச் செய்த பாவமே' - இவ்வாறு ஜனதிபதி பிரேமதாஸா சென்ஜோசப் கல்லூரி பரிசளிப்பு விழாவின்போது கூறியுள்ளார்.*

*நாலாபுறமும் பகைமையும் நெருக்கடியும் சூழ்ந்துகொண்டு அவர் கழுத்தை நெரிக்கும் போது தான் அவருக்கு இந்த உண்மை வெளிச்சமாகியுள்ளது. சில நெருக்கடிகளின் போதுதான் பல விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள் நிகழ்வதுபோல் பிரேமதாஸா அவர்களுக்கும் நாட்டின் நெருக்குதல்கள் இந்த 'ஞான வெளிச்சத்தை' ஊட்டியுள்ளது.*

*இவர்போன்ற அரசியல்வாதிகள், முன்னர் இவைபோன்ற நெருக்கடிகளையே தமது அரசியல் லாபங்களுக்காகப் பயன்படுத்தினர். ஆனல் தற்போது, இவர்கள் போன்றவர்களால் வளர்க்கப்பட்ட பிரச்சினைகளே இவர்களுக்கெதிராகத் திரும்பும் போது ஞானம் உதயமாவதுதான் வேடிக்கை.*

*எதுவோ ஞானம் நல்லவற்றுக்காகப் பயன் பட்டால் சரி.*

திசை
THISAI

118, 4ஆம் குறுக்குத்தெரு,
த. பெ. 122,
யாழ்ப்பாணம்.

தந்தி : 'சற்வியூ'
ஆசிரியர்:
மு. பொன்னம்பலம்

சந்தா விபரங்கள்:
(உள்நாட்டுத் தபாற் கட்டணத்தையும், வெளிநாட்டுத் தபாற் கட்டணத்தையும் உள்ளடக்கியது.)

இலங்கை
ஒரு வருடம்–ரூபா: 200/-
அரைவருடம்–ரூபா: 100/

இந்தியா
ஒரு வருடம்–ரூபா: 300/-
(இந்திய ரூபா)

சிங்கப்பூர் / மலேசியா
ஒரு வருடம் –
யு.எஸ்.டொலர் 40

ஏனைய நாடுகள்
ஒரு வருடம் –
யு.எஸ்.டொலர் 60

காசோலைகள் அனைத்தும் நியூ ஈரா பப்ளிகேஷன்ஸ் லிமிட்டெட் (New Era Publications Ltd.) என்றே, எழுதப்பட வேண்டும்.

## தந்தை செல்வா

# நினைவு வைபவங்கள் நடைபெறுமா?

ஆசிரியர்,
திசை

தந்தை செல்வநாயகம் அவர்களுடைய 91 ஆவது ஜனன தினம் எதிர்வரும் மார்ச் 31 இலும், அன்னாரது 12 ஆவது சிரார்த்த தினம் எதிர்வரும் ஏப்பிரல் 26 இலும் நன்றியுள்ள தமிழ்மக்களால் கொண்டாடவும், நினைவு கூரவும் படும் என்பது தெரிந்ததே.

தந்தை செல்வாவின் பெயரால் அச்சுவேலி, உரும்பிராய் பகுதிகளில் வீடமைப்புத் திட்டங்களும், திருகோணமலை உள்ளிட்ட ஏனைய இடங்களில் காணியற்ற மக்களுச்கு குடியேற்றத் திட்டங்களும் நினைவுச் சின்னங்களாக நிறுவப்பட்ட போதிலும், தந்தை செல்வா நினைவு தின ஏற்பாடுகள், அவர் பிரதிநிதித்துவப் படுத்திய காங்கேசன்துறைத் தொகுதிக்குட்பட்ட அவரது பிறந்த ஊரான தெல்லிப் பழைக்கு அப்பால் பிரதான வைபவங்களாக இடம்பெறுவது. அவரது ஞாபகார்த்தமாக நிறுவப்பட்டிருக்கும் அவரது அகவையைக் குறித்து எழுப்பப்பட்டிருக்கும் எண்பது அடி உயர்ந்தோங்கிய செல்வா நினைவுத்தூபி நிறுவப்பட்டிருக்கும், தந்தை செல்வா நினைவாலயத்திலேயே.

எப்படியாயினும் பாதுகாப்புக் காரணங்களால் யாழ். பழைய ஒல்லாந்தர் கோட்டையில் இராணுவம் இடங் கொண்டதன் பின் தந்தை செல்வா நினைவு தின ஏற்பாடுகள் பெரும்பாலும் யாழ். வை. எம். சி. ஏ. மண்டபத்திலும், அடுத்து நல்லூர் இந்து விடுதியிலுமே தொடர்ந்து நடைபெற்று வந்துள்ளன.



தந்தை செல்வா நினைவு தின ஏற்பாடுகள் இவ்வாண்டு எங்கு நடைபெறவுள்ளன? பிரதான வைபவம் தந்தை செல்வா நினைவாலயத்திற்குத் திரும்புமா? என அறிய பொது மக்கள் ஆவலாய் உள்ளனர். தந்தை செல்வா நினைவு தின ஏற்பாடுகளை ஒழுங்கு செய்வதற்குப் பொறுப்பேற்றிருக்கும், தந்தை செல்வா அறங்காவல் குழுவினரிடம் இருந்து அது குறித்து தகவல் ஏதும் வெளிவராது இருப்பது பெரிதும் விசனத்துக்குரியதே; இவ்வாண்டு வைபவங்களின் போதாவது சம்பந்தப்பட்டவர்களால் முன்னர் வாக்களிக்கப்பட்டபடி தந்தை செல்வாவின் வாழ்க்கை வரலாறு கூறும் நூல் வெளியிடப்படுமா? என்பதே கோடி பொன் பெறும் இவ்வாண்டிற்குரிய வினாவாகும்.

திரவியம்
யாழ்ப்பாணம்

அன்பின் ஆசிரியருக்கு,

'இலக்கிய கர்த்தாவை நாம் கொலைசெய்ய வேண்டாம்' என்ற தலைப்பில் வேரற்கேணியன் என்பவர் எழுதிய கருத்திற்காக, நாம் இக் கருத்தை வெளியிடுகிறோம்.

முதலில் நீங்கள் எங்கள் மார்க்க விதிமுறைகளை அறியுங்கள். அதன்பின் தண்டனை வழங்குவதைப் பற்றிக் கூறுங்கள். எங்கள் இஸ்லாம் 'ஒரு பூரண வாழ்க்கைத் திட்டம்' இத் திட்டத்தினை மாற்றி அமைக்க யாராலும் முடியாது! எந்த நாட்டில் பிறந்த குடிமகனுயிருப்பினும்.

இஸ்லாமியன் குற்றம் புரிந்தான் என நிரூபிக்கப்பட்டால் அவனுக்கு தண்டனை வழங்குவதை இஸ்லாம் வலியுறுத்துகிறது. இத் தீர்ப்பை வைத்தே நியாயமான தண்டனையாக சல்மான் ருஷ்டிக்கும் தண்டனை வழங்கப்பட்டு இருக்கிறது.

ஐ. இம்ரான்கான்
யாழ்ப்பாணம்.

இந்தியாவில் பிறந்து பிரிட்டனில் வாழ்ந்துவரும் ஸல்மான் ருஷ்டி எழுதிய 'சாத்தானின் செய்யுள்கள்' என்ற நூல் உலகில் வாழும் 120 கோடி முஸ்லிம்களின் மனதைப் பெருமளவில் பாதித்து விட்டது. இதனை முஸ்லிமாகப் பிறந்த ஒருவனுலேயே அறிந்துகொள்ள முடியும்.

547 பக்கங்களையுடைய 'சாத்தானின் செய்யுள்கள்' குர் ஆனின் வசனங்களை 'ஷைத்தானின் உளறல்கள்' என மக்கள் மனதில் பதிய வைக்க எடுத்த முயற்சி என்பதை அதன் தலைப்பே கூறுகின்றது.

மேலும், இது போன்ற கறைபடிந்த சொற்களால் இஸ்லாத்தின் புனிதத் தன்மையை மாசுபடுத்தும் எழுத்தாளர் ருஷ்டியை, தீவிரவாதப் போக்குடையோர் கொல்லவேண்டுமென இடித்துரைத்துள்ளனர். ஆனல் பல முஸ்லிம்கள், அவர் எழுதிய நூலுக்கு மன்னிப்புக் கேட்டுக் கண்டிக்கப்பட வேண்டுமெனக் கூறுகிறுர்களே தவிர, கொல்லப்படவேண்டுமெனக் கூறவில்லை. தலைவர் கொமெய்னியின் தீர்ப்பு முஸ்லிம்களின் முழுமையான தீர்ப்பு எனக் கூறுவதற்கில்லை.

ஏ.ஜெ.எம். ஹில்மி
ஆஸாத் வீதி,
யாழ்ப்பாணம்.

# யாழ்ப்பாணத்தில் கிரிக்கட்

### யாழ்ப்பாணக் கல்லூரி எதிர் மகாஜனு கல்லூரி

இப்போட்டி மகாஜனு கல்லூரி மைதானத்தில் பெப்ரவரி 11ஆம் திகதி நடைபெற்றது. இப் போட்டியில் காயா, பழமா போட்டதில் வென்ற மகாஜனு அணி யாழ்ப்பாணக் கல்லூரியை ஆடும்படி அழைத்தது. இவ் அணி 1–வது இனிங்ஸில் சகல விக்கட்டுக்களையும் இழந்து 133 ஓட்டங்களைப் பெற்றது. பிரேமானந்தன், குலசிங்கம் ஆகியோர்முறையே 45, 27 ஓட்டங்களை எடுத்தனர். 58, 44 ஓட்டங்களைக் கொடுத்து சுபதாஸ், நெவின்ஸ்ராஜ் முறையே 5, 4 விக்கட்டுக்களை கைப்பற்றினர்.

பின்னர் ஆடிய மகாஜனு அணி சகல விக்கட்டுகளையும் இழந்து 205 ஓட்டங்களைப் பெற்றது. விஜயகுலன், வரதராஜன் நெவின்ஸ்ராஜ் முறையே 38, 36, 31 ஓட்டங்களைப் பெற்றனர். மதியழகன், பிரேமானந்தன், செல்வேந்திரா ஆகியோர் 27, 37, 40 ஓட்டங்களைக் கொடுத்து முறையே 4, 3, 2 விக்கட்டுக்களைக் கைப்பற்றினர்.

பின்பு ஆடிய யாழ்ப்பாணக் கல்லூரி 2-வது இனிங்ஸில் 5 விக்கட்டுகளை இழந்து 83 ஓட்டங்களைப் பெற்றது. சுபதாஸ், நெவின்ஸ்ராஜ் 41, 34 ஓட்டங்களைக் கொடுத்து முறையே 3, 2 விக்கட்டுகளைக் கைப்பற்றினர். ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

— ப. பிறேம் ஆனந்

### மகாஜனு எதிர் ஸ்கந்தவரோதயா கல்லூரி

மகாஜனு கல்லூரி மைதானத்தில் கடந்த பெப்ரவரி 26இல் நடைபெற்ற கிரிக்கட் ஆட்டத்தில், முதலில் மட்டை வீசிய ஸ்கந்தா அணி 86 ஓட்டங்களைப் பெற்றது. ரொபின்சன் 34 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது காயம் ஒன்றின் காரணமாக வெளியேறினுர். மகாஜனு அணி சார்பில் பந்து வீசிய சுபதாஸ், நெவின்ஸ்ராஜ் முறையே 25, 41 ஓட்டங்களுக்கு தலா 4 விக்கட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலளித்து ஆடிய மகாஜனு அணி 9 விக்கட்டுக்களுக்கு 182 ஓட்டங்களைப் பெற்றிருந்த வேளை ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது. இவ்வணி சார்பில் அதன் தலைவர் பத்மஜெயந் சிறப்பாக ஆடி 96 ஓட்டங்களைப் பெற்ருர். வரதராஜன் 25 ஓட்டங்களைப் பெற்ருர். ராமச்சந்திரன், பிறேமநாதன் முறையே 53, 38 ஓட்டங்களுக்கு தலா 3 விக்கட்டுக்களைக் கைப்பற்றினர்.

ஸ்கந்தா அணி தனது இரண்டாவது இனிங்ஸில் 8 விக்கட்டுக்களை இழந்து 62 ஓட்டங்களைப்பெற்றது. விஜயகுலன் 3 ஓட்டங்களுக்கு 3 விக்கட்டுக்களையும், சுபதாஸ் 26 ஓட்டங்களுக்கு 3 விக்கட்டுகளையும் கைப்பற்றினர். ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

— எம். பாலா

### பத்திரிசியார், பரி. யோவான் கல்லூரிகளுக்கு வெற்றி

சமீபத்தில் கல்லூரிகளுக்கிடையே நடைபெற்ற இரு போட்டிகளில், ஒன்றில் பரி. யோவான் கல்லூரியும் மற்றையதில் பத்திரிசியார் கல்லூரியும் வெற்றிபெற்றன.

### பத்திரிசியார் கல்லூரி எதிர் மத்திய கல்லூரி

இப் போட்டி பத்திரிசியார் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. முதலில் ஆடிய பத்திரிசிய அணி 92 ஓட்டங்களுக்குச் சகல ஆட்டக்காரரையும் இழந்தது. A. ஜஸ்ரின் மாத்திரம் தனித்து நின்று ஆடி ஐந்து பவுண்டரி அடங்கிய 30 ஓட்டங்களைப் பெற்ருர். மத்திய கல்லூரி சார்பில் ராஜ்குமார் 18 ஓட்டங்களைக் கொடுத்து 6 விக்கட்டுகளைக் கைப்பற்றினுர்.

தொடர்ந்து ஆடிய மத்திய கல்லூரி 75 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. இதிலும் ராஜ்குமாரே 17 ஓட்டங்களைப் பெற்ருர். பத்திரிசிய அணி சார்பில் S. செல்வராஜ் 40 ஓட்டங்களுக்கு 4 விக்கட்டுகளை வீழ்த்தினுர்.

தொடர்ந்து ஆடிய பத்திரிசியர்கள் 95 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தனர். ஜஸ்ரின், யூலியன் ஆகியோர் தலா 20 ஓட்டங்கள் பெற்றனர். B. ரமேஸ் மத்திய கல்லூரிக்காக 20 ஓட்டங்களுக்கு 4 விக்கட்டுகளைக் கைப்பற்றினுர். வெற்றிபெற 112 ஓட்டங்கள் பெறவேண்டிய நிலையில், 2 ஆவது தடவையாகத் துடுப்பெடுத்தாடிய மத்திய கல்லூரி 46 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. ராஜ்குமார் 18 ஓட்டங்கள் பெற்ருர். செல்வராஜ், அந்தோனிப்பிள்ளை ஆகியோர் முறையே 4, 3 விக்கட்டுகளைக் கைப்பற்றினர். பத்திரிசியார் கல்லூரி 66 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

### பரி. யோவான் கல்லூரி எதிர் யாழ்ப்பாணக் கல்லூரி

இப் போட்டி யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. முதலில் ஆடிய பரி யோவான் கல்லூரி 314 ஓட்டங்களுக்கு 6 விக்கட்டுகளை இழந்து ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது. ஆரம்ப துடுப்பாட்டக்காரரான S.N. புவனரத்தினம் இவ்வருடத்தின் கல்லூரிகளுக்கிடையேயான போட்டிகளின் முதல் செஞ்சுரியைப் பெற்ருர். இவர் 107 ஓட்டங்களைப் பெற்ருர். S. சுதேசன், T. சஞ்சிவன் ஆகியோர் 57, 51 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் மதிதரன், செல்வேந்திரா ஆகியோர் தலா இரு விக்கட்டுகளைப் பெற்றனர். தொடர்ந்து ஆடிய யாழ்ப்பாணக்கல்லூரி 120 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. பிரேமானந்தன், குலசிங்கம் ஆகியோர் தலா 26 ஓட்டங்களைப் பெற்றனர். சஞ்சீவன் சிறப்பாகப் பந்துவீசி 40 ஓட்டங்களுக்கு 6 விக்கட்டுகளை வீழ்த்தினுர். பரி. யோவான் கல்லூரி விக்கட் காப்பாளர் இங்கு 4 கட்சுகளைப் பிடித்ததைக் குறிப்பிட வேண்டும்.

தொடர்ந்து ஆடப் பணிக்கப்பட்ட யாழ்ப்பாணக் கல்லூரி 144 ஓட்டங்களுக்கு மீண்டும் ஆட்டமிழந்தது. டானியல், குலசிங்கம் ஆகியோர் தலா 50 ஓட்டங்கள் பெற்றனர். இவர்களை எதிர்த்துப் பந்து வீசிய சஞ்சீவன் 7 விக்கட்டுகளைக் கைப்பற்றினுர். பரி.யோவான் கல்லூரி இனிங்சாலும் 50 ஓட்டங்களாலும் வெற்றி பெற்றது.

—G.S. சவரிமுத்து

Novena Prayer

May the sacred Heart of Jesus be adored and glorified loved and preserved throughout the world now and for ever.

Sacred Heart of Jesus - Pray for us.
St. Jude worker of miracles - Pray for us.
St. Jude help of helpless - Pray for us

Thank you Jesus
Thank you St. Jude
say the prayer (9) times a day for (9) days.
It has never been known to fail.

A 008

# இலங்கையில் சித்திரவதைகள்: "நான் பெருவிரலில் தொங்கினேன்"

*இங்கே தரப்பட்டுள்ள சித்திரவதைச் சம்பவங்கள் ஏதோ பயங்கர மர்மக் கொலைக் கதைகளில் இருந்து பெயர்த்தெடுத்துத் தரப்பட்டவையல்ல. இலங்கை இராணுவத்தின் விசேட அதிரடிப் படையினரால் (S.T.F.) பயங்கரவாதிகள் எனக் கைது செய்யப்பட்ட அப்பாவித் தமிழ் இளைஞர்கள், நடுத்தர வயதினர் ஆகியோருக்குக் கொடுக்கப்பட்ட சித்திரவதைகளே. 'சர்வதேச மன்னிப்புச் சபை'யால் அண்மைக் காலத்தில் இலங்கையில் காணமல் போனவர்களும் சித்திரவதைகளும் பற்றிய தகவல்' என்று வெளியிடப்பட்டவை முன்னர், எமது நிறுவனத்தின் பத்திரிகையான 'சற்றடே றிவியூ' வில் தொடர்ந்து பிரசுரமாயின. இங்கு அவற்றின் சில பகுதிகளை, அவற்றின் தேவையும் முக்கியத்துவமும் கருதித் தமிழ் வாசகர்களுக்கு மொழிபெயர்த்துத் தருகிறோம். —(ஆ-ர்)*

அண்மைக் காலத்தில் ஏறக்குறைய 3000 க்கு மேற்பட்ட இளம் ஆண்களும் பெண்களும் கைதுசெய்யப்பட்டு தடுப்பு முகாம்களில் வைக்கப்பட்டு உள்ளார்கள். இவர்கள் எல்லாம் பயங்கரவாத இயக்கங்களோடு சம்பந்தப்பட்டுள்ளார்கள் என்ற பேரில் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் அல்லது அவசரகாலச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களாவர். இப்படிக் கைது செய்யப்பட்டு காணமல் போனவர்கள் அநேகம். அவர்கள் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டனர், சிலர் சாகடிக்கப்பட்டனர், சிலர் கைது செய்யப்பட்டபின்னர் சுடப்பட்டு அவர்களது உடல்கள் ரகசியமாக அகற்றப்பட்டன என்பனவற்றை நம்புவதற்கு சர்வதேச மன்னிப்புச் சபைக்கு பலமான காரணங்கள் உண்டு.

ஆயுதம் தாங்கிய தமிழ் இயக்கங்களையும் அவற்றின் அங்கத்தவர்களைப் பற்றியும் அறிவதற்கு சித்திரவதையே பிரதான வழியாக எஸ்.ரி.எவ். வால் கருதப்படுகிறது. எங்காவது ஒரு பகுதியிலுள்ள 15க்கும் 45 வயதிற்கும் உட்பட்ட சகல ஆண்களும் (தமிழ்) கைது செய்யப்பட்டு முகம் மறைக்கப்பட்ட தலையாட்டியின் முன்னே விடப்பட்டு, தலையாட்டியால் அடையாளம் காட்டப்படுவோர் சித்திரவதைக்கும் விசாரணைக்கும் எடுத்துச் செல்லப்படுவதே எஸ்.ரி.எவ். ஆல் கடைப்பிடிக்கப்படும் பொதுவான முறையாகும். உதாரணத்துக்கு கிழக்கு மாகாணத்தில் உள்ள புத்தூர் வாசியான 31 வயதுடைய ஒருவர் தனக்கு நடந்தவற்றைக் கூறுவதை இங்கே தருகிறோம். (பல எதிர் விளைவுகளுக்கு அஞ்சி அவரது பெயர், உத்தியோகம் இங்கு தரப்படவில்லை.)

சிவா

1986-9-3 இல் மட்டக்களப்பு எஸ்.ரி.எவ். சேத்துக்குடா, வீச்சுக்குளமுனை போன்ற இடங்களைச் சுற்றிவளைத்து 15க்கும் 45 வயதுக்கும் உட்பட்ட 320 ஆண்களைக் கைது செய்து 3 இராணுவ லொறிகளில் கல்லடி முகாமுக்குக் கொண்டு சென்றது. அங்கு நானும் இன்னும் ஐந்து பேரும் தலையாட்டியால் 'குற்றவாளி'களாகக் காணப்பட்டதால், எம்மோடு கைது செய்யப்பட்ட, ஏனையவர்களை விடுதலை செய்த பின்னர் எம்மை விசாரணைக்காகத் தடுத்து வைத்திருந்தனர்.


அன்றிரவு நான் அந்த திறந்தவெளிக் கட்டிடத்திலிருந்த முன்னறையில் விடப்பட்டேன். அக் கட்டிடத்தின் பின் இரண்டு அறைகளும் 8×8 அடி அளவுடையனவாகவும் முன்னுள்ள மூன்று அறைகளில் இரண்டு 4×7 அடி அளவும், அடுத்தது 6×7 அடி அளவுடையதாகவும் இருந்தது. ஒவ்வொரு பின்னறையிலும் 25 பேர் வரை அடைக்கப்பட்டும், முன்னறைகளில் 15 அல்லது 12 பேர் வரை அடைக்கப்பட்டும் இடந்தனர்.

நான் 4×7 அடி அளவுடைய அறைக்குள் கிடந்தேன். அதற்குள் படுப்பதற்குப் போதிய இடம் இல்லாததால் ஒருவர் உடல்மேல் ஒருவர் படுக்கவேண்டிய அவலம். அத்தோடு எங்களுக்கு அளிக்கப்பட்ட உணவு என்பது, எங்களது வெறும் தட்டுகளில் சிமெந்துக் கிராதிகள் ஊடாக கரண்டிகளால்கிள்ளிப்போடப்பட்டவையே. அறைக்கு வெளியே வைக்கப்பட்டிருந்த தண்ணீர் பேசினில் கிராதிகள் ஊடாககைகளை ஓட்டிக்கழுவிக் கொண்டோம். காலையில் 10 நிமிடம் மலசலம் கழிப்பதற்காகத் தரப்பட்டது. அதே போல் மாலை 4 மணிக்கு 10 அல்லது 15 நிமிடம் கொடுக்கப்படும். இதற்கிடையில் இயற்கை உபாதைகளுக்கு உத்தரவு கேட்டால் நாம் பயங்கரமாகத் தாக்கப்பட்டோம்.

மூன்றும் நாள் நான் விசாரணைக்காக எடுத்துச் செல்லப்பட்டேன். முகாமின் பின்பகுதியிலிருந்த கட்டிடத்தின் ஓர் அறையில் நான் விசாரிக்கப்பட்டேன். அந்த அறை 10'×15' அடி அளவுடையது. அந்த அறையில் விசாரணை அதிகாரிக்காக ஒரு கதிரையும், மேசையும் போடப்பட்டிருந்தன. அதன் முன்னே அந்த அறையின் மேற்சட்டத்திலிருந்து ஒரு நைலோன் கயிறு தொங்கிக்கொண்டிருந்தது. மேசையிலும் நிலத்திலும் பொல்லுகளும் அல்கத்தீன் குழாய்களும் கிடந்தன. நாங்கள் மூன்று பேர் அறைக்குள் கொண்டு செல்லப்பட்டோம். ஆனல் நானே முதலில் விசாரிக்கப்பட்டேன். அடுத்த இருவரும் என்னருகே நின்று கவனிக்க விடப்பட்டனர்.

நான் எனது உடைகளை அகற்றும்படி கட்டளையிடப்பட்டேன். நான் எனது உடைகளை எல்லாம் களைந்து நிர்வாணமாக விசாரணை அதிகாரி முன்னே நின்றபோது, அவர் என்னை விசாரிக்கத் தொடங்கினர்; "நீ பயங்கரவாதிகளுக்கு உதவினயா?" அவர் என்னைக் கேட்டார். நான், "இல்லை" என்றேன். அதற்கு அவர், "நீ பயங்கரவாதிகளுக்கு உதவியிருக்கிறாய்" என்று கூறியபோது நான் பலமாகத் தாக்கப்பட்டேன்.

மூன்று பேர் என்னைப் பொல்லுகளால் தாக்கினர். என் உடலின் முழுப்பகுதியையும் அவர்கள் பதம் பார்த்தனர். அத்தோடு சப்பாத்து அணிந்தவர்களின் தாக்குதல் வேறு. அப்போதும் அவர்கள் பயங்கரவாதிகளோடு தொடர்பு கொண்டிருந்தேன என்று மீண்டும் மீண்டும் கேட்டுக்கொண்டிருந்தனர். இது 15 நிமிடம் வரை நீடித்தது. எனது உடல் எங்கும் தாங்க முடியாதவலி. அதன் பின்னர் எனது கைகள் இரண்டும் பின்னல் கொண்டு



வரப்பட்டு எனது கைபெருவிரல் இரண்டும் மெல்லிய நைலோன் கயிற்றினுல் நன்ருக இறுக்கிக் கட்டப்பட்டன. அதன் பின்னர் மேலே சட்டத்திலிருந்து தொங்கிக் கொண்டிருந்த பெரிய நைலோன் கயிறு எனது இறுக்கப்பட்டிருந்த பெருவிரல்கயிற்றுக்கூடாக எடுத்து அதனேடு இணைக்கப்பட்டது. அதன் பிறகு மேல் சட்டத்தில் தொங்கிக் கொண்டிருந்த நைலோன் கயிற்றினுல் மறுமுனையை இருவர் இழுத்தனர். நான் மேலே இழுக்கப்பட்டுத் தொங்கினேன். எனது உடலின் முழுப்பாரத்தையும் எனது பெருவிரல்கள் தாங்கவே நான் அளவிடமுடியாத சித்திரவதைக்குள்ளானேன். மூன்றடி உயரம் நிலத்திலிருந்து எழுப்பப்பட்டபோது, நைலோன் கயிறு எனது பெருவிரல்களின் தசைகளை வெட்டவே, இரத்தம் கொட்டத் தொடங்கிற்று.

அப்போதும் அவர்கள் 'உனக்கும் பயங்கரவாதிகளுக்கும் தொடர்பு இருந்ததா?'' என்று கேட்டதற்கு, நான் "இல்லை" என்றேன். உடனே அவர்கள் என்னைப் பொல்லுகளால் தாக்கினர். அடுத்தவர் அடித்தும் உதைத்தும் கொண்டிருக்கையில் இன்னெருவன் மிளகாய் தூளால் என் மறைவிடமெங்கும் தேய்த்தான். இது 15 நிமிடம் வரை நீடித்தது. பின்னர் எனது கட்டுத் தளர்த்தப்பட்டதும் நான் நிலத்தில் குப்புற விழுந்தேன். என் விரல்களிலிருந்து இரத்தம் பெருக்கெடுத்தது. நான் தாங்க முடியாத வேதனையில் துவண்டேன்.

பின்னர் இதே நபர் தனக்கு நடந்த இன்னெரு வகைச் சித்திரவதையையும் குறிப்பிடுகிறார்:

"எனது கால் பெருவிரல்கள் இரண்டும் ஒன்றுக்கப்பட்டு மேலே சட்டத்தில் தொங்கிக்கொண்டிருந்த கயிற்றேடு இணைக்கப்பட்டு நான் தலைகீழாக தொங்கவிடப்பட்டேன். நான் இப்படித் தொங்கிக் கொண்டிருக்கும் வேளையில் பொல்லுகளாலும் அல்கத்தீன் குழாய்களாலும், ஆறு பேர் மாறிமாறி எனது உள்ளங்கால்களைத் தாக்கினர். அரை மணித்தியாலமாக இது தொடர்ந்தது......"

14-ஆவணி 86 இல் கிழக்கு மாகாணப் பகுதியில் (முறக்கொட்டாஞ்சேனையில்) கைது செய்யப்பட்ட 23 வயது இளைஞர் தனக்கு நேர்ந்த அனுபவங்களைப் பின்வருமாறு கூறுகிறார்.

"நான் விசாரணை அறைக்குள் சென்றதும் எனது உடைகளைக் களைய உத்தரவிடப்பட்டேன். வழமைபோல் எனது கைப்பெருவிரல்கள் முதுகுக்குப் பின்னல் கொண்டு வரப்பட்டு இறுக்கப்பட்டன, நான் மேலே பெருவிரல்களின் பாரத்தில் தொங்கவிடப்பட்டேன். பின்னர் என்னை அவர்கள் பொல்லுகளால் அடிக்கத் தொடங்கினர். என்னை விசாரித்தவர் கேள்விகளைத் தொடர்ந்து கேட்டுக் கொண்டிருந்தார். நான் தாங்கமுடியாத வேதனையில் அரை மயக்க நிலையில் சென்றுகொண்டிருந்தபோது, அவர்கள் பழுக்கக் காய்ச்சிய இரும்புக் கம்பியால் என் முதுகில் சுட்டனர். நான் பலமாய்ச் சத்தமிட்டேன். பின்னர் மயங்கிப் போனேன். மீண்டும் நான் சிறிது குணப்பட்டதும் விசாரணைக்கு எடுத்துச் செல்லப்பட்டு, எனது உடம்பு, மறைவிடம் அனைத்தும் பழுக்கக் காய்ச்சிய இரும்புக் கம்பியால் சுடப்பட்டேன். ஆனல் இம்முறை என்னல் கத்த முடியவில்லை. காரணம் எனது வாய்க்குள் துணி அடையப்பட்டிருந்தது!

பொதுவாக, சர்வதேச மன்னிப்புச் சபையின் ஆய்வின்படி, எஸ்.ரி.எவ். ஆல் கையாளப்பட்டுவரும் சித்திரவதைகள் மிகக் குரூரமானதாகவும், மனிதக் கற்பனைக்கு அப்பாற்பட்ட காட்டுமிராண்டித் தனமானதாகவுமே உள்ளதாக அறியக்கிடக்கிறது. □

## ஒரு தாய் தலைகுனிகிறுள்

*அவள் பிள்ளை*
*இரவைக் கழிக்கும் சிறையில்;*
*என் பிள்ளை*
*சுகமாய், பாதுகாப்பாய் தூங்கும்.*

*அவள்பிள்ளையை*
*படைவீரன் நையப் புடைத்தான்;*
*என் பிள்ளையோ*
*படைவீரன்.*

*அவள் பிள்ளை*
*கிளர்ந்தெழுந்து எதிர்ப்பான்:*
*என் பிள்ளை*
*கட்டளைக்கு அடிபணிவான்*

— நான்சி நாகூம்
தமிழில்: கே. ராஜீ
நன்றி: Race & Class

## வடக்கு, கிழக்கு —

# குடித்தொகை இயக்கப் பண்புகளின் பாதிப்பு

(சென்ற வாரத் தொடர்ச்சி)




1970களில் அகிம்சை வழியில் அதிருப்தி அடைந்த இளைஞர்கள், காலப்போக்கில் தமது கொள்கைகள், சித்தாந்தங்களின் அடிப்படையில் பல்வேறு குழுக்களாயினர். இவர்கள் அனைவரும் ஆயுதப்போராட்டத்தையே மையமாகக் கொண்டு செயற்பட்டனர், இதனால் இலங்கை அரசு இவர்களை ஒடுக்குவதற்குத் தனது ஆயுதப்படையினரை நவீனப்படுத்தி, இக்குழுக்களின் மேல் ஏவிவிட்டதன் விளைவாக வடக்கு, கிழக்கு மாகாணத் தமிழ் மக்கள் உயிர், உடைமை இழப்புகளை மட்டுமல்லாது, அகதிகளாக உள்நாட்டிலும் இந்தியா மற்றும் மேற்குலக நாடுகளிலும், தஞ்சமடைய வேண்டிய நிலை ஏற்பட்டது. உயிர் இழப்புகளைப் பொறுத்தவரை 15— 40 வயதிற்கிடைப்பட்ட இளைஞர்கள் யுவதிகளே அதிகமானோராகவுள்ளதுடன், ஊனமுற்றவர்களும் அதிகரிக்லாயினர். இவ் வயதில் இறப்பினை ஏற்படுத்துவதற்குக் காரணமாயிருந்த காரணிகள் பின்வருமாறு:

I. அரசபடைக்கும் போராளிகளுக்குமிடையே இடம்பெற்ற மோதலின் விளைவாகப், பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள் இறப்பினைத் தழுவிக் கொண்டனர்.

II. அரசின் ஆயுதப்படையினால் பல ஆயிரக்கணக்கான சிவிலியன் மக்கள் இறப்பைத் தழுவிக்கொண்டனர். அதாவது மோதல் இடம்பெறும் பகுதியைச் சுற்றியுள்ளவர்கள், பெரிதும் பாதிப்படைந்துள்ளனர். 1981—1987 ஒக்ரோபர் வரையிலான பல்வேறு வகைப்பட்ட வன்செயல்களினால், 16994 பேர் இறந்துள்ளனர். 1278 பேரைக் காணவில்லை எனவும், 5272 பேர் காயமடைந்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது, (சஞ்சீவி 10-10-1987) இவை தவிர, 1987 ஒக்ரோபர் மாதத்தில் இருந்து ஏற்பட்டுவரும் இழப்புகளில் பெரும்பாலானவை இளைஞர்களேயாவர். இறந்தவர்களில் ஒரு பகுதியினரின் ஓராண்டு நினைவஞ்சலிகள் பத்திரிகைகளில் தற்போது வந்து கொண்டிருக்கின்றன. வழியற்றோரின் நினைவாஞ்சலி மௌனமாகவும், மண்ணோடு மண்ணாகவும் அமைந்திருக்கின்றது.

III. வடக்கு — கிழக்கு மாகாணங்களில் உள்ள எல்லைக் கிராமங்களில் வன்முறையாளரினால் ஏற்பட்ட இறப்புகள்— இதில் சிங்களவர், தமிழர்கள் இடம்பெறுவர்.

IV. இயக்கங்களுக்குள்ளேயும், இயக்கங்களுக்கிடையேயும் ஏற்பட்ட இறப்புகள்.

V. இந்திய அமைதிப் படைக்கும் போராளிகளுக்குமிடையில் இடம்பெற்றுவரும் மோதலினால் ஏற்பட்ட, இறப்புகள்.

இவ்வகையான பல்வேறு காரணிகளால் நிகழ்ந்துவரும் இறப்புகளில் பெரும்பாலானவை, 15—40 வயதிடைப்பட்டவர்களுடையவை. மேற்படி இறப்புகளின் உடனடித் தாக்கம் இழப்புகள் ஏற்பட்ட குடும்பத்தைச் சார்ந்ததாயினும், குடிப்புள்ளியியல் நோக்கில் பொருளாதாரம், சமூக நிலை, கலாசாரம் ஆகியவற்றின் வளர்ச்சியை மட்டுமல்லாது, நிகழ்கால எதிர்கால தொழிற்படையையும் தமிழர் சமூகம் இழந்து வருகின்றது என நம்பலாம். 15—40 வயதிடையான இறப்புகள் பின்வரும் விளைவுகளைக் குறிப்பாக ஏற்படுத்தும்.

I. வேலைப்படையை இழக்கும் நிலை.

II. பால் ரீதியிலான வேறுபாடுகளை, அதாவது ஆண்களிலும் பார்க்க பெண்களின் எண்ணிக்கையை உயர்வடையச் செய்துள்ளது. இது விவாக நிலையைப் பெரிதும் பாதிக்கும்.

III. விவாகமான இளம் வயதினர் அகால மரணமடைவது விதவைகள் அதிகரிப்பை ஏற்படுத்தி விடுகின்றது.

IV. குடும்பத் தலைவன் இறகும்போது குடும்ப அங்கத்தினர் அனாதையாகும் நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.

V. விவாகம் செய்யாதிருக்கும் பெண்களின் பங்கு அதிகரிக்கும்போது கருவளத்தினை அதாவது பிறப்புகளை கட்டுப்படுத்தி தமிழரின் குடித்தொகை வளர்ச்சியைப் பாதிக்கும்.

VI. தமிழர் சமூகத்தின் பொருளாதாரத்தை பாரதூரமாகப் பாதிக்கும்.

தமிழரிடையே அகால இறப்புகளின் அதிகரிப்பைத் தடுக்காதுவிடின் தமிழரின் எண்ணிக்கை, வளர்ச்சியை மட்டுமல்லாது பண்புகளையும், நாகரிகமான உலகில் தமிழரின் பண்பாட்டையும் பாதிக்கச் செய்யும் என நம்பலாம்.

### பிறப்புகள்:

இன ரீதியிலான வன்முறையின் விளைவாக அதிகமாக அகால இறப்புகளை மட்டுமல்லாது பிறப்புகளையும் கட்டுப்படுத்துகின்றன, இவற்றிற்கான காரணிகள் பின்வருமாறு:

I. பெண்களிற் பலர் நாட்டின் சராசரி விவாக வயதினை அடைந்த போதிலும் விவாகம் செய்யாதிருத்தல். இதற்கு விவாகம் செய்யும் வயதினை அடைந்த ஆண்களின் இறப்புகள் அதிகமாகவிருப்பது முக்கிய காரணமாகும்.

II. விவாகம் செய்யும் ஆண்கள் குறைவாகவிருக்கின்றபோது சீதனப் பேரம் அதிகரித்துக் காணப்படுகின்றமையால் விவாகங்கள் குறைவாகவிருத்தல்.

III. விவாகம் செய்த, செய்யாத ஆண்களிற் பலர் வெளிநாடுகளுக்கும் சிறைச்சாலைகளுக்கும் சென்று விட்டமை.

IV. தொடர்ச்சியான பயப்பிராந்திய நிலை காணப்படுவதும் வடக்கு— கிழக்கில் அண்மைக் காலங்களில் பிரசவத் தாய்மார்கள், குழந்தைகளின் இறப்பு அதிகரித்துச் செல்கின்றன என மருத்துவ நிபுணர்கள் ஆதாரத்துடன் எடுத்துக் கூறுகின்றனர். இத்தகைய இறப்புகளுக்கு கணிசமான பங்கினை பாதிப்படைந்துள்ள சுகாதார, மருத்துவ சேவைகளின் வசதிக்குறைவும், இரவு நேர ஊரடங்குச் சட்டமும் பெற்றுக் கொடுத்துள்ளது.

V. இலங்கைத் தமிழரில் பெரும்பான்மையானோர் கல்வியறிவுள்ளவர்களாக உள்ளதுடன் இவ்வகையான நெருக்கடியான காலப்பகுதிகளில் குழந்தைகளை வளர்த்தல் சிரமமானது என்று சிலர் கருதுவதால், குடும்பத் திட்டமிடலில் ஈடுபாடு கொள்ளல்.

இவை போன்ற பல காரணிகள் பிறப்பினைக் கட்டுப்படுத்தி குடிப்புள்ளியியல் பண்புகளை பாதிப்படையச் செய்வனவாகவுள்ளன.

### இடப்பெயர்வு நிலை:

1977 ஆம் ஆண்டுக்கு முன்னர் மூளைசாலிகளின் வெளியேற்றம் கணிசமான அளவு இருந்தது. ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியின் திறந்த பொருளாதாரக் கொள்கை

**கா. குகபாலன்**

யின் விளைவாக தொழில் வாய்ப்புத்தேடி, பல்வேறு மட்டங்களில் உள்ளவர்கள் வெளியிடப்பெயர்வினை மேற்கொண்டிருந்த போதிலும், 1983 ஆம் ஆண்டின் பின் இலங்கையில் வடக்கு, கிழக்குப் பகுதிகளிலிருந்து இளைஞர்கள் யுவதிகள் மற்றும் குடும்பங்களாக இந்தியா மற்றும் மேலை நாடுகளுக்கு அகதிகளாகச் சென்றடைந்தனர். இந்தியாவில் 125000 அகதிகளும் மேலை நாடுகளில் 80,000 அகதிகளும் தற்போது உள்ளனர். (இந்தியாவில் உள்ளவர்களில் ஒருபகுதியினர் நாடு திரும்பியுள்ளனர்.) இது மொத்த இலங்கைத் தமிழரின் குடித்தொகையில் ஏறத்தாழ 12 வீதமாகும். வெளிநாடுகளில் தஞ்சமடைந்தவர்களில் பலர் இளைஞர்களாகவுள்ளனர். வடக்கு, கிழக்கு மாகாணத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்தவர்களே அதிகமானவர்களாகும். இவ்வாறாக வெளிநாடுகளுக்குச் சென்றவர்களில் மிகச் சிறிய எண்ணிக்கையினரே இராணுவ நடவடிக்கையினைப் பொறுக்கமுடியாது சென்றவர்கள். ஏனையோர் உயிராபத்துக்கு அஞ்சியே வெளிநாடு சென்றாலும், அவர்கள் உள்ளூர அகதி அந்தஸ்துடன் பொருள் சம்பாதிப்பதை நோக்கமாகக் கொண்டவர்களாகவுள்ளனர். குறிப்பாக வெளிநாடுகளில் போதைவஸ்துக் கடத்தலில் ஈடுபடுபவர்களில் எம்மவரின் பங்கும் குறைந்ததல்ல என்பதை, சர்வதேச புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. யாழ்ப்பாண மாவட்ட மக்கள்வெளிநாடுசெல்வதற்கு, ஒவ்வொரு குடும்பத்திலும் பொருளாதார இருப்போ அல்லது கடன் பெறக்கூடிய வல்லமையோ இருந்துள்ளது. ஆனால் இராணுவக் கெடுபிடிகளினால் உயிர் உடைமைகளை இழந்த எல்லைப் பிரதேச மக்கள் அகதிகளாக மேற்குலக நாடுகளுக்கு செல்லாததிற்கு, அவர்களின் பொருளாதார நிலை தான் காரணமாகும். அகதிகளாகச் சென்றவர்கள்கூட இந்தியாவில் உள்ள அகதிகள் முகாம்களிலேயே தஞ்சமடைய வேண்டியிருந்தது.

அகதிகளாக வெளியிடப்பெயர்வினை மேந்கொண்டவர்களினால் ஏற்பட்ட, சாதகபாதக விளைவுகளை அறிதல் அவசியமாகும்.

I. வெளியிடப் பெயர்வினை மேற்கொண்டவர்கள் அகதிகளாகத் தரப்படும் உதவிப் பணத்தையோ அல்லது தொழில்களில் ஈடுபட்டோ தம் குடும்பங்களுக்கு பணமாகவும் பொருட்களாகவும், அனுப்பி விடுகின்றனர். இது இரு வழிகளில் நன்மை தருகின்றது. பெற்றுற்கொள்ளப்படும் குடும்பம் பொருளாதார ரீதியில் நன்மையை அடைகின்றது. இரண்டாவதாக, அரசாங்கம் பெருமளவிலான செலாவணியைப் பெற்றுக் கொள்கின்றது. எனினும் கூர்மையாகச் சிந்திக்கின் உள்விளைவுகள் பாரதூரமானவை; எதிர்காலத்தைச் சீரழிக்கவல்லவை.

அவையாவன :

II. மேலைத்தேச வெளியிடப்பெயர்வினை மேற்கொண்டவர்களில் 80 வீதத்துக்கு மேற்பட்டோர் ஆரம்ப அல்லது இடைத்தரக் கல்வியைப் பெற்றவர்களாக உள்ளனர். இடைத்தரக் கல்வியைக் கற்ற இளைஞர்கள் உயர் கல்வியைப் பெறக்கூடிய வாய்ப்பிருந்தும் அதனை உதறிவிட்டுச் செல்வதால் எதிர்காலக் கல்வியோடு தொடர்புடைய நிபுணத்துவத்தைப் பெறுது விடுகின்றனர். இவ் விளைவு கல்விப்பாரம்பரியத்தைக் கொண்ட வடக்கு, கிழக்கு வாழ் தமிழர் சமூகத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது, வெளிப்படை.

III. வெளியிடப் பெயர்வினை மேற்கொண்டவர்களில் விவாகம் செய்யக்கூடிய வயதைக் கொண்டவர்கள் அதிகமாகவிருந்தும், உரிய காலத்தில் விவாக நிலையை மேற்கொள்ளாமை, தமிழரின் வளர்ச்சியைத் தடைசெய்கிறது.

IV. இலங்கைத் தமிழரில் ஆண்களும், பெண்களும் ஏறத்தாழ ஒரே எண்ணிக்கையைக் கொண்டவர்களாயிருந்தாலும், அண்மைக்கால இறப்புகளும் வெளியேற்றமும் பெண்களின் அளவை உயர்த்தியுள்ளது. இது, பெண்களில் கணிசமானோர் விவாகம் செய்யாது கன்னியாக வாழவேண்டிய நிலையை, ஏற்படுத்தியுள்ளது. இது சமூகத்தில் பல்வேறு பாதிப்புகளை ஏற்படுத்தும்.

V. வெளிநாடுகளில் உள்ள எம் இனத்தவர்கள் இளைஞர்களானபடியால், எமது கலாசார பாரம்பரியத்தை தொடர்ச்சியாகப் பேணிவருபவர்கள் எனக் கூறமுடியாது. தாம் சென்றடைந்த நாடுகளில் உள்ள பொருளாதார, சமூக, கலாசாரத்துடன் தற்போது தற்காலிகமாகத் — தவிர்க்க முடியாமல் — இணைக்கப்பட்டவர்கள், காலப்போக்கில் எமது கலாசாரத்தைக் கைவிடவும் நேரிடும்.

VI. சிலவேளைகளில் நாட்டின்பிரச்சினைகள் தீர்க்கப்படும் பட்சத்தில், இவ்வகுப்பினர் மீளும்போது, அவர்கள் இப்பிரதேசத்திலுள்ள தொழில்களைச் செய்வதற்கு பின்னிற்கும் நிலை ஏற்பட வாய்ப்புண்டு. இது அனுபவரீதியில் காணப்பட்டதாகும். அதாவது நாகரிக வாழ்க்கை, கடின உழைப்பாற்றலின்மை போன்றன இவற்றைத் தடைசெய்யலாம்.

VII. வெளியிடப்பெயர்வில் குறிப்பாக இந்தியாவுக்குச் சென்றவர்களில் பலர், இங்குள்ள தமது தோட்டங்களை அறுதியாக விற்றோ அல்லது அநாதரவாக விட்டோ சென்றுள்ளனர். அவர்கள் மீண்டும் மீளும் சந்தர்ப்பத்தில் பொருளாதாரச் சுமையை சமாளிக்க வேண்டிய நிலை ஏற்பட, வாய்ப்புண்டு.

VIII ஏற்கெனவே, ஐரோப்பியர் ஆட்சியின் விளைவாக ஓரளவு நலிவுற்றிருந்த தமிழரின் தனித்தன்மை வாய்ந்த கலாசாரத்துடன், மேற்குலகின் பல்வேறு நாடுகளின் கலாசாரங்களும் சேரும்போது, மீண்டும் தனித்தன்மையை இழக்கும் நிலை ஏற்பட வாய்ப்புண்டு.

இவ்வாறாக பல்வேறு பாதிப்புகள் இறப்பு, பிறப்பு, இடப்பெயர்வு ஆகிய குடித்தொகை இயக்கப் பண்புகளில் ஏற்பட்டு, எதிர்காலத் தமிழரின் வாழ்வு வளமிழக்க வாய்ப்பை ஏற்படுத்தி வருகிறது.

(9 ஆம் பக்கம் பார்க்க)

## அறிவியல் உலகம்

# வண்ணத்துப் பூச்சிகளும் வளை எலிகளும்

(சென்ற வாரத் தொடர்ச்சி)

பியர் துல்லியர்

இதிலிருந்து, ஐன்ஸ்டீன் விசேடச் சார்புக் கொள்கையையும் பொதுச் சார்பு நிலையையும் ஆராய்ந்ததற்குக் காரணம் நாம் அன்றாடம் வாழும் உலகத்தைவிடச் சிறந்த உண்மையான உலகமொன்றைக் கண்டு அநுபவிக்க வேண்டும் என்ற நோக்கமாயிருக்கும் என்று நாம் புரிந்து கொள்ளலாம்.

சார்புக் கொள்கையின் முக்கியாம்சம் என்ன? சார்பு நிலை என்று பெயர் இருந்தாலும் நிலையாக உள்ள இயற்கை விதியைக் காண்பது அதன் நோக்கம்.

இன்னும் எளிமையாகச் சொல்வதென்றால், ஒவ்வொருவருக்கும் அவரவர் இருக்குமிடத்தைப் பொறுத்து வெவ்வேறு தோற்றம் தெரிகிறது. அதை விடுத்து, இயல்பாக உள்ள நிலை என்ன என்பதை அறிய முற்படுவது சார்புக் கொள்கை எனலாம். நம்முடைய புலனுணர்வுகளுக்கும் உணர்ச்சிகளுக்கும் அப்பாற்பட்டு உயர்ந்த தரம் வாய்ந்து உள்ள உலகினைக் காண்பதற்கு முனையும் திட்டமே சார்பு நிலைப் பௌதிகம் என்று கூறலாம்.

ஐன்ஸ்டீனின் சார்புநிலை ஊகங்களை மாயத் தோற்றங்கள் என்று குறை கூறியவர்கள் உண்டு. 1923 இல் பாரிஸில் வெளியான கிறிஸ்டியன் கார்னலிசன் என்பாரின் புத்தகத்தில் ஐன்ஸ்டீனின் சில கருத்துக்கள் முட்டாள்தனத்தின் அடித்தளத்திற்குப் போகின்றன என்றும், அநேகவற்றை முன்னூகமாக வைத்துக் கொண்டு மெய்ஞ்ஞானத்தில் இஷ்டம்போல் சிந்தனைகளை மேயவிட்டிருக்கிறார் என்றும் கூறப்பட்டிருக்கிறது. ஒரு வகையில் ஐன்ஸ்டீன் செய்தது சரியே. அத்தகைய கோட்பாடுகளை உருவாக்குவதற்கு அவருக்குத் தைரியமேற்பட்டதற்குக் காரணம் அவர் தம்முடைய முன்னூகங்கள் பொறுத்து உறுதியான நம்பிக்கை கொண்டிருந்ததாகும்.

ஃபிரெஞ்சு கணித நிபுணரான ஹென்றி பாய்ன்கேர் சார்பு நிலைக் கோட்பாட்டினை புதுப்புது உபயோகங்களில் ஈடுபடுத்தலாம் என்று கண்டார். சார்பு கொள்கையினை வைத்து ஒரு புதிய கோட்பாட்டை உருவாக்கினார் டச்சு பௌதிக அறிஞரான லொரென்ஸ். அப்புதிய கோட்பாட்டை ஐன்ஸ்டீனும் ஏற்றுக் கொண்டார்.

சார்புக் கொள்கையை ஐன்ஸ்டீன் போலவே புரிந்து கொண்டவர் பாய்ன்கேர். அப்படியிருந்தும் அனுபவம் உணர்த்திய ஒரு நெறி அது என்று பாய்ன்கேர் கருதினார். ஐன்ஸ்டீனின் கோட்பாடின்றியே இயற்பியல் வாழ முடியும் எனவும் சொன்னார். அதாவது, பழங்கொள்கைகளைப் பாய்ன்கேர் அழிக்க விரும்பவில்லை. ஆனால் ஐன்டீன் அப்படிப்பட்ட கோழை அல்லர், தன் கோட்பாடு இன்றியமையாதது என்றும், சிறிது காலத்துக்காவது ஆட்சேபத்துக்கிடமின்றி அது நிற்கும் என்றும் ஐன்ஸ்டீன் கருதினார். பாய்ன்கேர் வெறும் பழமைவாதி, ஐன்ஸ்டீனோ புதிய பாதையில் துணிந்து சென்றவர். சார்புக் கொள்கை கண்டுபிடிப்பதற்கு அறிவு மட்டும் போதாது; புதிய அடிப்படைகளைக் காண்பதில் பித்து மனப்பான்மையும் வேண்டும்.

ஐன்ஸ்டீன் 1905 இல் வெளியிட்ட கட்டுரையில் சார்புக் கொள்கை பற்றியும், ஒளியின் வேகம் மாறாதது என்பது பற்றியும் ஆணித்தரமாகச் சொல்லியிருந்தார். இப்படி ஆணித்தரமாகக் கூறுவதற்கு மிக்க தைரியம் வேண்டும். மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்போது இரண்டு கருத்துக்களும் முரண்பட்டவையாகத் தோன்றும். எனவே, ஒளியின் வேகம் மாறாதது என்று அடித்துச் சொல்ல வேண்டும் என்ற கருத்து அவருக்கு எப்படி வந்தது?

அநேக பௌதிக நிபுணர்கள் மைக்கெல்சன் சோதனை (1881), மைக்கெல்சன்—மார்லி சோதனை (1887) ஆகியவை தந்த கருத்தைவைத்தே ஐன்ஸ்டீன் தன் கோட்பாடுகளை உருவாக்கினார் என்று கருதினார்கள். அச் சமயம் அசைவற்ற நிலையில் யாங்கணும் பரந்திருப்பதாகக் கருதப்பட்ட ஈதர் வழியாக ஒளி பரவுவதாகக் கருதப்பட்டு வந்தது. மைக்கெல்சனின் சோதனை பற்றி இங்கு விரிவாக ஆராய வேண்டியதில்லை.

ஐன்ஸ்டீனே தெளிவாகக் கூறியுள்ளார். "எனக்கு முதன் முதல் மைக்கெல்சன் சோதனை பற்றித் தெரிய வந்தது எப்போது என்று உறுதியாகச் சொல்ல முடியவில்லை. என் சொந்த ஆராச்சியில் மைக்கெல்சனின் சோதனைக்கு எந்தப் பங்கும் கிடையாது" என்று, அது தன் மீது நேரடி பாதிப்பு செய்ததாகத் தெரியவில்லை என்று ஐன்ஸ்டீன் பன்முறை கூறியிருக்கிறார்.

ஐன்ஸ்டீன் தன் சுய சரிதக் குறிப்புகளில் தான் தன்னுடைய பதினாறாவது வயதில் ஒரு புதிரைப் போட்டுக் கொண்டு, அது பற்றிப் பத்தாண்டுகள் சிந்தித்து வந்ததாகக் குறிப்பிடுகிறார். ஓர் ஒளிக்கற்றையை துரத்திக் கொண்டு நான் ஒளியின்வேகத்தில் பின்சென்றால் என்ன தெரியும் என்பதுதான் அவர் போட்டுக் கொண்ட புதிர். அப் புதிரின் மீது சிந்தனை செய்து, அந்த ஒளிக்கற்றை ஓரிடத்து நிற்கும் மின்காந்தப் புலமாகத் தோற்றும் என்று ஒரு விடையை ஊகம் செய்ததாகச் சொல்லுகிறார். என்றாலும் அப்படி இருக்க முடியாது என்று தோன்றியது. விடை காணவேண்டிய புதிர் தான் இது என்று அவருக்கும் பட்டது. இந்தப் புதிரில் விசேடச் சார்புக் கொள்கையின் வித்து அமைந்து விட்டது எனவும் குறிப்பிடுகிறார். ஆகவே மைக்கேல்சன் சோதனையில் விளைந்த இடருக்கு விடைகாணும் முயற்சியில் சார்புக் கொள்கை உருவானதாகச் சொல்வது சரியில்லை.

வேறொரு பிரச்சினைக்குவிசேட சார்புக் கொள்கை பிறகும் வழிவகுத்தது என்று தெரிய வருகிறது. மின் கடத்திகளுக்கும் காந்தங்களுக்குமிடையே செயலிசைவு இல்லாமலிருப்பது ஏன் என்பது அப் பிரச்சினை. காந்தம் அசையாதிருக்கும் போது மின் கடத்தியை இயங்கச் செய்தால் என்ன நிகழும். அதே காந்தத்தை மின் கடத்தி அசையாதிருக்கையில் இயங்கச் செய்தால் என்ன நிகழும் என்று இரு விதமாகப் பார்த்த மாக்ஸ்வெல் கோட்பாட்டின்படி இரண்டு வகையான விளக்கங்கள் கொடுக்க வேண்டியிருந்தது. ஐன்ஸ்டீனுக்கு இவை அபத்தமாகப் பட்டது. அவரைப் பொறுத்தவரை, காந்தம், மின்கடத்தி ஆகியவற்றின் இயக்கம் சார்ந்தது விளைவு. ஐன்ஸ்டீன் தன் 1905 ஆம் ஆண்டுக் கட்டுரையில் எழுதிய முதல் வாக்கியம் இதைத் தெளிவாகச் சொல்கிறது." செயலியைவின்மை பற்றிய மாக்ஸ்வெல்லின் மின் இயக்கவியல் கருத்தானது மின் தத்துவத்திலோ காந்தத் தத்துவத்திலோ இயற்கையாய் அமைந்தது என்பதாகக் கொள்ள முடியாது; அது ஒன்றின் இயக்கத்தைச் சார்ந்து அமைவதாகும்" என்பது அவ்வாக்கியம்.

இவ்வாறு ஐன்ஸ்டீன் கூறுவதிலிருந்து அகவுணர்வு கொண்டு பகுத்தறிவு வாதம் செய்பவர் 'அவர் என்பது விளங்கும். அவருடைய "பகுத்தறிவு" மிக ஆழமானது; அவருடைய சொந்தக் கருத்துக்கள், மனப்படிகங்கள், சொந்த உணர்ச்சிகள் ஆகியவற்றால் வளர்க்கப்படுகிறது, வழிகாட்டப்படுகிறது.

ஜேம்ஸ் ஹட்மார்ட் என்பவர் ஒருமுறை ஐன்ஸ்டீனிடம் ஒரு கேள்வி கேட்டதற்கு ஐன்ஸ்டீன் பின்வருமாறு பதிலளித்தார். "நான் சிந்திக்கும்போது சொற்களோ மொழிகளோ பங்கு பெறுவதில்லை. சிந்தனையின் அடிப்படையாக உள்ள உளவியற் கூறுகள் தெளிவான அடையாளக் குறிகளும் படிமங்களுமே. விரும்பும்போது அவற்றை மீண்டும் என் மனக்கண்முன் கொண்டு வரமுடியும்; தொகுத்துப் பார்க்க முடியும்." இந்த உளவியற் கூறுகளிடையே ஓர் ஒழுங்கமைப்பும் தருக்க அடிப்படையும் இயற்கையாகவே உண்டு. சிந்தனை முறையைப் பற்றித் தன் சுயசரிதக் குறிப்புகளில் குறிக்கும்போது, "நம்முடைய சிந்தனை நடைபெறுவதை நாம் உணராத வகையிலே அது செயல்படுகிறது" என்று சொல்கிறார். இப்படிப்பட்ட சிந்தனை முறை, காலம்-இடம் பற்றிச் சுயமாகத் தன் சொந்தப் போக்கில் அறிந்து கூற உதவியாயிருக்கிறது என்று விளங்குகிறது.

ஐன்ஸ்டீன் சிந்தனை மேற்கொண்டது பற்றிக் கூறியுள்ளதிலிருந்து அவர் ஒருவகையில் அதிர்ஷ்டசாலி எனலாம். பிள்ளைப் பருவத்தில் அவரால் சரிவரப் பேச முடியவில்லை என்று சொல்லப்படுகிறது. அது பின்பு சிந்தனையில் வல்லவராக்க உதவியதோ என்னவோ?

"எனக்குச் சில சமயம் வியப்பு ஏற்படுகிறது, எத்தனையோ விஞ்ஞானிகள் இருக்க நான் ஒருவன் மட்டுமே சார்புக் கொள்கை உருவாக்கியிருப்பது ஏன் என்று வியப்பு ஏற்படுகிறது. நான் நினைக்கிறேன் வயது வந்தவர்கள் காலம்- இடம் பற்றிய பிரச்சினையைப் பற்றி கவலைப்படுவதே இல்லை என்று. குழந்தைப் பருவத்திலிருந்து தாம் அறிந்தவற்றினைப் பற்றி முற்றிலுமே தமக்குத் தெரிந்துவிட்டது என்று அவர்கள் எண்ணிக் கொள்கிறார்கள். ஆனால் நானோ, வயது வந்தபின் காலம்- இடம் பற்றி எனக்கு நானே கேள்விகள் போட்டுக் கொள்ளத் தொடங்கினேன். அதன் விளைவாக பிரச்சினையை, மனம் வளர்ச்சியடைந்த குழந்தையைவிட ஆழமாகப் பார்க்க இயன்றது" என்று ஐன்ஸ்டீன் கூறியுள்ளார்.

பிள்ளைப் பருவத்தில் ஐன்ஸ்டீன் பேச மறுத்தது எதைக் காட்டுகிறது? மாமூலாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கருத்துகளினால் பாதிப்புறாமல் ஒதுங்கியிருந்து, சுயமாகச் சிந்திக்கும் ஆற்றலை அவரிடம் வளர்த்திருக்கிறது எனத் தெரிகிறது. அறிவு வளர்ச்சியின் அடையாளமாகப் பிள்ளை பேசவேண்டுமென்று சமுதாயம் கருதுகிறது. சொல்லிக் கொடுக்கப்பட்டவற்றையும் உண்மைகளைப் பற்றிய விளக்கங்களையும் அப்படியே ஏற்றுக்கொள்ள வழி செய்கிற கல்வியை வெற்றிகரமான கல்வி என்று சமுதாயம் கருதுகிறது. சமுதாயப் பாங்கிலேயே உருவாக்கப்பட்ட மனம் பற்றற்றது; ஒதுங்கி நின்று சிந்திக்க இயலாதது. அறிவுச் சுதந்திரம் இருந்தால் நடைமுறையில் உள்ள நம்பிக்கைகள், கருத்துக்கள் முதலியவற்றை எந்தச் சமுதாய சூழ்நிலையிலும் ஐயக்கண் கொண்டு பார்த்து சுயமாகச் சிந்திக்க வழி ஏற்படும். ஐன்ஸ்டீனைப் பொறுத்தவரை அவரே சொல்கிறார், தனக்குத் திட்டவட்டமான பிடிவாதமான சுதந்திரச் சிந்தனைப் பழக்கம் உண்டு என்று.

ஐன்ஸ்டீன் வரலாற்றை ஆராய்ந்தவர்கள் அவர் வாழ்ந்த சூழ்நிலை ஒரு குறிப்பிட்ட சிந்தனை மரபுக்குள் அடங்கிக் கிடப்பதை வலியுறுத்தி அறிவு முடக்கம் செய்யவில்லை என்கிறார்கள். அவர் ஜூரிக்கில் மேற்படிப்பு படித்தார். 1905 இல் சார்புக் கொள்கை எழுதுகையில் பேர்ன் நகரில் வேலை பார்த்தார். அப்போது சுவிட்சர்லாந்து தேசம், தம் நாடுகளில் அடங்குமுறை தாளாது ஓடிவந்து புகலிடம் தேடியவர்களுக்கெல்லாம் இடம் கொடுத்தது. எனவே ஐன்ஸ்டீனுக்கு ஒரு சுதந்திரச் சூழ்நிலை அமைந்தது. அரசியலைப் பற்றி மட்டுமல்ல, அறிவாதாரக் கொள்கை, உளவியல், ஆராச்சி போன்றவற்றைப் பற்றியெல்லாம் காரசாரமான விவாதங்கள் நடைபெற்ற சூழ்நிலை ஐன்ஸ்டீனுக்குப் புதிய கருத்துக்களைக் கூறத் துணிவை அளித்தது. சுவிட்சர்லாந்துக்கு வந்து சேர்ந்தவர்களில் சில முக்கியமானவர்கள் பெயரை மட்டும் சொன்னால் அங்கு நிலவிய சூழ்நிலையைப் புரிந்துகொள்ளலாம். ரோஸா லக்சம்பர்க், ஜார்ஜ் பளோக்கனேவ், முசோலினி, கார்ல்ராடக், லெனின் முதலியோர் அங்கு வந்து சேர்ந்தவர்கள்.

இந்தக் கட்டுரையை முடிக்கும்முன், சார்புநிலைக் கோட்பாடு என்னும் பெயர் உண்டாக்கிய குழப்பங்களைப் பற்றிச் சொல்லவேண்டும். ஏதோ சார்புத் தன்மை அல்லது அகப்பண்பு சம்பந்தப்பட்டது என்று நினைக்க அந்தப் பெயர் இடம்கொடுக்கிறது. 'அசல் உலகம் பற்றிய கோட்பாடு' என்று மினாவ்ஸ்கி கூறியது போலப் பெயர் இருந்தாலும் அவ்வளவு குழம்பாது. இட அளவுகளும், கால அளவுகளும், நோக்குபவரைச் சார்ந்து அமைபவை என்பது ஐன்ஸ்டீன் கோட்பாடு என்றாலும் 'இடம்— காலம்' என்பது உண்மையை— முழுமையை நேரடியாக அணுக முடியாவிட்டாலும், பார்ப்பவர் பொறுத்து அமைகின்ற தனி முக்கியத்துவத்தை உணர்த்துவதாகும். 1911 க்கு 'முன்பு ஐன்ஸ்டீன் சார்புக் கொள்கை என்னும் பெயரைப் பயன்படுத்தவில்லை. ஏன் இறுதியில் அந்தப் பெயரை சூட்டினார் ஐன்ஸ்டீன்? மனோத்தத்துவ காரணம்தான் கூற முடியும். நியூட்டன் கூறியவாறு அறுதியான இடமோ, அறுதியான சம காலிகமோ கிடையாது. சார்பு நிலை என்றவுடனே நியூட்டனின் 'அறுதிகள்' ஒழிந்தது நினைவுக்கு வரும். சார்பு நிலை என்றவுடனே 'புரட்சிகரமான கோட்பாடு' என்ற நினைவு தோன்றும். எனவே சார்புநிலை என்னும் சொல் காலத்தின் போக்குக்கு ஏற்ப, ஜூரிக் பேரன் நகரங்களில் விளங்கிய உணர்ச்சிகளுக்கு ஏற்ப அமைந்தது என்று வரலாற்றாசிரியர் எல்.எஸ்.பியூயர் கூறியது சரியே. □

கலைச்சாரல்

# பரிச்சயமின்மையால் எதிர்க்கப்படும், நவீன ஓவியங்கள் சிற்பங்கள்...



ஹிரோஷிமாவில் அணுக்குண்டு வீச்சில் பலியானவர்களின் நினைவுச் சின்னம்

நவீன ஓவியங்கள், சிற்பங்கள் எல்லாம் புரியாத ஒரு புதிராக உள்ளன என்று பொதுவாக ஒரு கருத்து நிலவி வருகிறது. பாமர மக்கள் மட்டுமின்றி, கற்றறிந்தவர்களும் இக்கருத்தைச் சொல்லும் போது அது உண்மையாக இருக்குமோ என ஐயுறத் தோன்றுகிறது.

மரபு சார்ந்த ஓவியங்களும், சிற்பங்களும், எல்லோரும் அறிந்த ஒரு கருத்தையோ அல்லது காட்சியையோ அழகோடு எடுத்துக்காட்டுவதால் எல்லோருக்கும் தெரிந்த புரிந்த ஒன்ருக இருக்கின்றன. எடுத்துக்காட்டாக, ரவிவர்மாவால் படைக்கப்பட்ட சகுந்தலையையோ, ராமனையோ, சரஸ்வதியையோ புரிந்து கொள்ள இடர்பாடு ஏதும் இல்லை. ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகச் சொல்லப்பட்டதையும், மக்களுக்கு மிகவும் தெரிந்ததுமான காட்சியை மறுபடியும் ஓவியமாகவோ, சிற்பமாகவோ படைக்கும் போது குறைபாடுகள் இருந்தால்கூட கவனிக்கப்படாமல் பொருட்படுத்தப் படாமல் போய்விடுகிறது. கலைப்படைப்பில் கலை முக்கியத்துவம் இன்றி, அறிந்தது தெரிந்தது, பழக்கமானது, சொல்லப்பட்டது—புரிவது- என்பதாலேயே அவை ஏற்கப்பட்டன.

ஆனல் ஏற்கனவே கதையிலும், கவிதையிலும், சொல்லப்படாமல் விடப்பட்ட ஒரு பொருளைப்பற்றி, கருத்தைப் பற்றி, புதிதாகப் படைக்கப்படும் ஓவியத்தையோ, சித்திரத்தையோ சிற்பத்தையோ தனது சுய அறிவு, சிந்தனை, ரசனை, ஆகியவற்றின் துணையால் மட்டுமே அறிந்து கொள்ள முடியாமற் போகும் போது, நவீன ஓவியம் கடுமையான குற்றச்சாட்டிற்கு ஆளாகிறது. ஒவ்வொரு புதிய அம்சமும் அதன் தொடக்க காலத்தில் எதிர்ப்புக்களை எதிர் கொள்ளவேண்டியே உள்ளது என்பது கலைகளைப்பற்றிய வரையில் எப்பொழுதும் ஒரு நிரந்தரமான உண்மையாகும். ஏனெனில் இதர துறைகளில், புதிய படைப்புகளின் பலனை நேரடியாக மக்கள் அனுபவிப்பதால், நாளடைவில் புதுமையை ஏற்றுக்கொண்டு விடுகிருர்கள். கலைப்படைப்பில் பயன் என்பது, மகிழ்ச்சி மனக்கிளர்ச்சி என்று சம்பந்தப்பட்டு உளளதால் கலைப்படைப்புகள் தொடர்ந்து எதிர்க்கப்பட்டே வருகின்றன.

நவீன கலைக்கான எதிர்ப்பு இந்தியாவில் மட்டுந்தான் என்று இல்லை, ஐரோப்பாவிலும் இருந்தது. பிக்காசோவின் மரபை மீறிய படைப்புகள், கலை படைக்கப்பட்ட காலத்திலேயே மூர்க்கத்தனமாக எதிர்க்கப்பட்டன.

**சரவணன்**

பின்னல் உலகம் முழுவதும் பாராட்டப்பட்ட அகஸ்டீன் ரூதேன் சிற்பங்கள் சிற்பங்களே இல்லையென முதலில் ஒதுக்கப்பட்டன. ஆனல் அவரோ சோர்வேயறியாமல் தன் படைப்புக்களை தொடர்ந்து உருவாக்கிக் கொண்டு வந்தார். அறிவாளிகளையும், மேதைகளையும் கொண்ட பிரான்ஸ் இலக்கிய அகாடமி இலக்கிய மேதையான பால்சாக் உருவச் சிலையொன்றை வடிக்கும் பொறுப்பை அகஸ்டீன் ரூதேனிடம் கொடுத்தது. ரூதேன் பால்சாக் நாவல்கள், சிறு கதைகளை எல்லாம் படித்தார்; பால்சாக்கை வரைந்த ஓவியங்களை எல்லாம் பார்த்தார்.

அவற்றின் அடிப்படையில் பால்சாக் சிற்பத்தை ரூதேன் சிருஷ்டித்து வைத்தார். பிரான்ஸ் இலக்கிய அகடாமியினர் வந்து பால்சாக் சிற்பத்தைப் பார்த்தார்கள். அவர்களுக்குத் தூக்கிவாரிப்போட்டது. அவர்களுக்கு பழக்கமான—அறிந்த பால்சாக்கையே காணும். பால்சாக் சிற்பம், பால்சாக் மாதிரியே இல்லையென நிராகரித்து விட்டார்கள்.

இலக்கியத்தில் புதுமை சோதனை என்றுஓர் உச்சத்தை எட்டியவர்களால்கூட, நவீன மேதையான ரூதேன் படைப்பில் காணப்பட்ட புதுமையான வீச்சைக் கண்டறிந்து கொள்ள முடியாமல் போய் விட்டது. ஆனல், அசல் கலைஞர்கள், 'படைப்பாளிகள் சோர்ந்து போவது இல்லை. அவர்கள் சரித்திரம் தங்கள் பக்கம் உள்ளது என்று தொடர்ந்து செயல்படுகிருர்கள்.

பிரான்ஸ் இலக்கிய அகாடமி நிராகரித்த பால்சாக் சிற்பத்தை பல ஆண்டுகள் கழித்து ஏற்றுக்கொண்டது. இன்று அது ரூதேனின் அருமையான படைப்புக்களில் ஒன்ருகக் கருதப்படுகிறது. பிரான்ஸ் மட்டுமல்ல, உலகம் முழுவதுமே மாபெரும் சிற்பியென ரூதேனை அங்கீகரித்துக் கொண்டாடுகிறது. ரூதேன் அசலான நவீன சிற்பி. கருத்துக்களையும், சிந்தனைகளையும் மூலாதாரமாகக் கொண்டு தனது படைப்புக்களை உருவாக்கினர். ஆனல் அவர் மரபு, பாரம்பரியம், சரித்திரம் ஆகியவற்றை நன்கு அறிந்தவர். அதனலேயே அவரால் புத்தம் புதிய ஜீவனுள்ள கலையைப் படைக்க முடிந்தது. இவர் படைப்பு ஏற்கனவே சொல்லப்பட்டதைப் பிரதியெடுப்பதாக அமையவில்லை; ஏற்கனவே சொல்லப்பட்டது, அறியப்பட்டது, பார்க்கப்பட்டது, ஆகிய எல்லாவற்றையும் உதறியது. ஆனல் அசலான படைப்புக்களின் மீது ஆதாரப்பட்டு இருப்பது. அவர் தன் படைப்புக்களை நவீனமாக உருவாக்கிய போதிலும், அசலான பழைய படைப்புக்களை வெகுவாகக் கொண்டாடினர். அவற்றில் ஒன்றுதான் தமிழகச் சிற்பக்கலையின் உச்சமென கொண்டாடப்படும், நடராசர் சிற்பம். அதன் இளமை, மேன்மை உயிர்த்துடிப்பு பற்றி அகஸ்டீன் ரூதேன் நிறையச் சொல்லி இருக்கிருர். அவர் படைப்புக்களில் காணப்படும் வேகம், சக்தி, எழில், ஆகியவற்றுக்கு நடராசர் சிற்பத்தின் செல்வாக்கு ஒரு காரணம் என்றே சொல்லவேண்டும். மனித இனம் சார்ந்தே அவர் படைத்தார். அதன் காரணமாக அவருக்குப் பின்னல், சிற்பத் துறையில் ஈடுபட்ட ஒவ்வொருவரையும் அவர் பாதித்தார் என்பதைவிட, அவர் பாதிப்பில் இருந்து தப்பி முன்னே செல்வதே பலருக்குச் சாத்தியம் இல்லாமல் போய்விட்டது என்று, சொல்ல வேண்டும்.

இந்தியாவில் நவீன ஓவியம், நவீன சிற்பம் என்பது இரண்டாவது உலகப்போருக்குப் பிறகு தான் நன்கு தழைக்க ஆரம்பித்தது. அதற்கு முன்னல் ஐரோப்பிய முறையை பிரதி செய்யும் அம்சமாக இவைகள் இருந்தன. இந்தியக் காட்சிகள், கோயில்கள், கோட்டைகள், மனிதர்கள் ஆகியவற்றை பல ஆங்கிலேய ஓவியர்கள் ஓவியமாகத் தீட்

(10-ஆம் பக்கம் பார்க்க)

## கொலைசெய்யப்பட்ட நாடகக் கலைஞர் சவ்தார் ஹஸ்மி

இந்தியாவிலுள்ள கலைஞர்கள், எழுத்தாளர்கள் மற்றும் அரசியல்அக்கறை கொண்டவர்களது மனச்சாட்சியையே உலுக்கிவிட்ட சம்பவம் இவ் வருட புத்தாண்டு தினத்தன்று அங்கு நிகழ்ந்துள்ளது. ஒரு நாடகக் கலைஞர் நாடகம் நடந்துகொண்டிருந்த போது குண்டர்களால் அடித்துக் கொல்லப்பட்டதே அந்தச் சம்பவமாகும். கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தையே அச்சுறுத்தக்கூடிய இந்த நிகழ்வு அங்கு பலத்த கண்டனங்களைத் தோற்றுவித்துள்ளது.

இந்தியாவின் உத்தரப் பிரதேசத்தில், சாஹிபாத்தில் உள்ள ஜன்தாபூர் என்ற இடத்தில் இது இடம்பெற்றுள்ளது. கொலைசெய்யப்பட்டவர் சவ்தார் ஹஸ்மி என்ற நாடகக் கலைஞர். 'ஜன் நாட்ய மஞ்ச்' ('ஜனம்') என்ற கலாசார அமைப்பின் முக்கியஸ்தர்.

ஆலைத்தொழில் மயப்பட்ட இப்பகுதியில் தொழிலாளர்களுக்கும், தொழிற்சாலை உரிமையாளர்களுக்கும் ஏற்பட்ட பிரச்சினைகளால் கடந்த ஆண்டு இறுதிப் பகுதியிலிருந்து பதட்டம் நிலவி வந்தது. இந்த முறுகலான சூழலில், கடந்த புதுவருடத் தினத்தன்று, 'ஜன் நாட்ய மஞ்ச்' தொழிலாளரின் சம்பள உயர்விற்கான கிளர்ச்சி பற்றிய ஹல்ல பொல் (Halla Bol) என்ற வீதி நாடகம் ஒன்றை நடாத்திக் கொண்டிருந்தது. அச் சமயம் அங்கு வந்த கும்பலொன்று நாடகக் கலைஞர்களைத் தாக்கத் தொடங்கியது. தலையில் பலத்த காயங்களுக்குள்ளான ஹஸ்மி வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டார். எனினும் அவரின் உயிரைக் காப்பாற்ற முடியவில்லை.

இக் கொலைக்குத் தூண்டுகோலாக இருந்தவர், கொங்கிரஸ் கட்சி ஆதரவாளரும், அப்பகுதிமாநகரசபைத் தேர்தலில் வேட்பாளராக நிற்பவருமான முகேஸ் குப்தா என்று குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

எம்.எவ். ஹுசேய்ன், விஷ்ணு பிரபாகர், ரகுவீர் சாஹே, எம். எஸ. சத்யூ, எம்.கே. ரெய்ன, கோவிந் நிஹாலினி, உத்பால் தத் ஆகிய இந்தியாவின் பிரபலமான கலைஞர்கள் உட்பட பல கலைஞர்களும் எழுத்தாளர்களும் இச் சம்பவத்தைக் கூட்டாகக் கண்டித்ததோடு, கடந்த ஜனவரி 9 ஆம் திகதியை தேசிய துக்க தினமாக அனுஷ்டிக்க வேண்டுமென்றும் அழைப்பு விடுத்திருக்கிருர்கள்.

அண்மையில் டெல்லியில் நடந்த சர்வதேச திரைப்பட விழாவின் ஆரம்ப நாளன்று பிரபல நடிகை சபன அஸ்மியின் தலைமையில் இக் கொலையைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் நடந்ததும் குறிப்பிடத்தக்கது.

இந்திய மாக்ஸிஸ்ற் கொம்யூனிஸ்ற் கட்சியின் முக்கிய உறுப்பினரான ஹஸ்மி அக்கட்சியின் கலாசார அமைப்பான 'ஜன் நாட்ய மஞ்ச்' சோடு மிகவும் நெருக்கமான தொடர்பு கொண்டவர். மக்களைப் பாதிக்கும் பல்வேறு பிரச்சினைகளையும் இவ்வமைப்பு வீதி நாடகங்கள் மூலம் வெளிக் கொண்டு வருவதில் ஆர்வம் காட்டிவந்தது. இவ்வமைப்பு தயாரித்த 24 வீதி நாடகங்களும் ஏறக்குறைய 4000 தடவைகள் நடாத்திக் காட்டப்பட்டதாகச் சொல்லப்படுகிறது.

மாணவராக விருந்தபோதே ஹஸ்மி மாணவரியக்கங்களில் தொடர்பு கொண்டிருந்ததோடு, கலை இலக்கியங்களிலும் ஆர்வம் காட்டிவந்தார். ஆங்கிலத்தில் பின்பட்டப் படிப்பை முடித்துக் கொண்ட இவர் சிறிது காலம் ஆங்கில ஆசிரியராகவும் கடமையாற்றினர். அதன் பின்னர் 'பிறெஸ் இன்ஸ்ரிரியூட் ஒவ் இந்தியா' வில் சிறிது காலம் பணியாற்றினர். மேற்கு வங்காள அரசின் தகவல் பகுதியில் தகவல் அதிகாரியாகவும் இவர் கடமையாற்றியுள்ளார்.

— நீலகி □

## ஒரு முடிவின் ஆரம்பத்தில்......

— மைதிலி அருளையா

நீ வருவாயா ... ... வரமாட்டாயா?
மீண்டும் வருவாய் என்றுதான்
நிலவு சொல்கிறது ... ...
மலர்கள் சொல்கின்றன ... ...
மரங்களும் சேர்ந்தே.
ஆனால் மனதிற்குமட்டும்
ஆறுதலே இல்லை ... ...
அது கடலலைகளைப் போல்
குமுறியபடி அலைகிறது.
பனிகள் துளித்துளிகளாக
மரங்களில் விழுகின்றன ... ...
அந்த விசையினால் தாக்குப்பட்டு
மலர்கள் அசைகின்றன
தென்றல் இதமாக வருடுகிறது ... ...
அதுஎனக்கு ஆறுதல் அளிப்பதுபோல்
ஏதோ இரகசியங்களை
என் காதோரங்களில்
செருகிச் செல்கிறது.

நீ எங்கள் மண்ணில் விழுந்தாயாமே ... ...
உன் குருதி மெது மெதுவாயோடி
நம் மண்ணை நனைத்ததாம்.

சூரியன் இறந்து விட்டான் ... ...
இன்று
இதனை எம்
இரு கண்களாலும் கண்டோம்
இரத்தம் ஓடியது ... ...
அது மேகத்தை ஈரமாக்கியது
ஆற்றாமையோடு அவன்
கடலினுள் வீழ்ந்தான் ... ...
குருதி கடலினுள்ளும் கலந்தது.
நாங்கள் கண்டோம்
இரு கண்களாலும் ... ...
மேற்குத் திசையில் அவன்
இறந்து வீழ்ந்ததை.

மரங்களிலெல்லாம் இலைகள்
உதிர்ந்து விட்டன
ஆனாலும் துளிர்கள்
துளிர்க்கத் தொடங்கிவிட்டன.
இதயம் சட்டென்று எரிந்து
சாம்பராகி விட்டதுபோல்
தோன்றுகிறது.
ஆனால்
அதுவும் அழிந்து விடவில்லை
உனது நம்பிக்கை விளக்கிற்கு
எண்ணெய் இட்டுக்கொண்டிருக்கிறது!

மரணம் என்கின்ற வார்த்தை
மிகவும் கொடுமையானது
நீ இறந்தவிதத்தை விளக்கிச்சொன்னால்
என் வார்த்தைகளிற்குக் கூட
காயம் ஏற்பட்டு விடுமோவென்று
அச்சப்படுகிறேன் ... ...

இந்த நிசப்தமான பின்னிரவில்
நினைவுகள் எங்கெல்லாமோ
அலைகிறது ... ...
ஆயினும்
ஒன்றுமட்டும் சர்வநிச்சயம்
உனது கனவுகள்
வெறும் கற்பனைகளல்ல ... ...
நாளைய சந்ததி அதனை
அலட்சியம் செய்யாது! □

## தூவானம்

O எழுத்தாளர் பட்டறை

O தா. இராமலிங்கம்

எத்துறையிலும் வளர்ச்சியுறுவதற்கு மேலும் மேலும் அறியமுனைவதும், பயிற்சியும் அவசியமானவை என்ற உண்மை,எழுத்துத் துறைக்கும் பொருத்தமானது. ஆனால், எமது சூழலில் எழுத்துத் துறையில் இது பற்றிய அக்கறை போதுமான அளவில் நிலவவில்லையென்பது, துரதிர்ஷ்டமான உண்மையாகும்; ஆரம்ப எழுத்தாளருக்கு மட்டுமல்லாது பழைய எழுத்தாளர்கள் பலருக்கும் இது பொருந்திவரும். வளர்ச்சிக்கு இந் நிலைமை நீடிப்பது நல்லதல்ல. நாடகத்துறையிலும் ஓவியத்துறையிலும் சமீப காலங்களில் கொடுக்கப்பட்டு வரும் பயிற்சிகளையாவது, எழுத்துத்துறையைச் சேர்ந்தோர் கவனத்திற் கொள்ள வேண்டும்.

இத்தகைய சூழலில் நான் உளவியற் சஞ்சிகையினால் ஒழுங்கு செய்யப்பட்டு, சென்ற வாரத்தில் மூன்று நாட்கள் (10,11,12) நடத்தப்பட்ட எழுத்தாளர் பட்டறை, முக்கியத்துவம் பெறுகிறது. பல்வேறு வாழ்க்கை நிலைகளிலுள்ள, ஆனால் எழுத்துத் துறையில் ஆர்வம் கொண்டு எழுதிக் கொண்டிருக்கின்ற ஆரம்ப எழுத்தாளர் 36 பேர் இதிற் கலந்துகொண்டனர். பயிற்சி நாட்களில் எல்லோரும் ஓரிடத்தில் தொடர்ந்து தங்கியிருந்தமையும் முக்கியமானது; இதன்மூலம் ஒருவரை ஒருவர் அறிந்து கொள்ளவும், நெருக்கங் கொள்ளவும் முடிந்தது.

சிறுகதை,கவிதை, வானொலி எழுத்து, பத்திரிகை எழுத்து என்பவற்றில் பயன்மிக்க கருத்துக்களுடன் அவர்கள் தொடர்பு கொள்ள முடிந்தது. நல்ல சிறுகதை, கவிதை என்பவற்றின் பொதுப் போக்குகள் என்பன விளக்கி அறிமுகப்படுத்தப்பட்டதோடு, ஆறு எழுத்தாளர்களும் இரண்டு கவிஞர்களும் 'எப்படி எழுதுகிறோம்' எனத் தமது அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர். எழுத்தாளர்களை நேரில் அறிந்து கொண்டதும், படைப்பு உருவாகும் விதங்களை (வெவ்வேறான முறைகளில்) தெரிந்து கொண்டதும், பயிற்சியாளர்களுக்கு புதுமையான அனுபவங்களாயிருந்ததை அறிந்து கொள்ள முடிந்தது. முக்கியமாக, வித்தியாசமான கலை இலக்கியக் கொள்கைகள், எழுத்தாளர்கள், படைப்பு முறைகள், படைப்புகள் இருப்பதும், அவற்றுடன் மேலும் மேலும் பரிச்சயம் கொண்டு உணர்வுபூர்வமாகத் தெரிந்து கொள்ள வேண்டுமென்பதும், வாசிப்பினதும் மொழிப்பிரயோகத்தினதும் முக்கியத்துவமும் பயிற்சியாளர்களிடம் பதிய வைக்கப்பட்டன. அவர்களும், தொடர்ந்து இத்துறைகள் பற்றி 'அறியவேண்டும்' என்ற உணர்வுடன்தான் பயிற்சி முடித்துச் சென்றார்கள். எதிர்காலப் பயன் கருதி இன்று தூவப்பட்ட 'விதைகள்' முளைத்து நிச்சயம் பயன் கொடுக்கும்— வாசக நிலையிலும், படைப்பு நிலையிலும்!

மயிலங்கூடலூர் பி. நடராஜன், கோகிலா மகேந்திரன், அ. யேசுராசா, செங்கை ஆழியான், ஐ.சாந்தன், எஸ்.தணிகாசலம், சொக்கன், எம். ஏ. நுஃமான், என். சண்முகலிங்கன், அ. சண்முகதாஸ், கரவையூர் செல்வம், எஸ். திருச்செல்வம், சபா. ஜெயராசா, சித்திரலேகா மௌனகுரு ஆகியோரே தமது அனுபவங்களையும் கருத்துக்களையும் பயிற்சியாளர்களுடன் பகிர்ந்து கொண்டவர்கள்.

முன்னோடி முயற்சியொன்றை மேற்கொண்ட நான் சஞ்சிகைக் குழுவினரும், 'பட்டறை'யை நெறிப்படுத்திய சி. மௌனகுருவும் பாராட்டுக்குரியவர்கள். □

இன்று புதுக்கவிதை பெரும்பாலானவர்களால் ஒரு இலக்கிய வடிவமாக ஏற்றுக்கொள்ளப்பட்டுவிட்டது; புதியவர்களில் பெரும்பாலானோர் இதிலேயே ஈடுபாடுகொண்டுமுள்ளனர். ஆனால் எழுபதுகளின் நடுப்பகுதிவரை,'புதுக்கவிதை' எமது விமர்சகர்கள் பலரால் ஏற்றுக்கொள்ளப்படாத ஒன்றாக இருந்தது. தனித்துவமும் தன்னம்பிக்கையும் கொண்ட கலைஞர்கள் தனிவழி செல்லத் தயங்குவதில்லையல்லவா? கல்வயலைச் சேர்ந்த தா. இராமலிங்கம் அத்தகைய ஒரு கவிஞர்தான். தமிழ்ப் புதுக்கவிதை வரலாற்றில் (தமிழகத்தையும் ஈழத்தையும் சேர்த்து) அவருக்கு முக்கிய இடமுண்டு. அவரது கவிதைகள் புதுமெய்க் கவிதைகள் (1964), காணிக்கை (1965) என்ற பெயரில் நூல்களாக வந்துள்ளன. புதுக்கவிதைத் துறையில் எனக்கு 'வெளிச்சத்'தைத் தந்த முதல் நூல்கள் இவைகளே என்பதை, நன்றியுடன் நினைவு கூர்கிறேன். இளங் கவிஞர்கள் இந்த நூல்களைக் கட்டாயம் வாசிக்க வேண்டும். மாதிரிக்குச் சில கவிதைகள்;

### துயிலுகையில் பயங்கரங்கள்

துயிலுகிறேன்!
கனவுலகில் நிகழுது பயங்கரங்கள்
சூரியனின் அனற்பிழம்பு வெடித்து
வீழ்கிறது சமுத்திரத்தில்!
திரை மோதுகுது பனைஉயரம்
ஆவிகக்கிக் கரைமீறி நிலம்மேவி
ஓடுகுது கொதிவெள்ளம்!
மரஞ்செடிகள் விலங்குமக்கள்
அவிந்து வெம்பி வதைந்தழிய
ஓங்குகுது பிணப்படையல்
ஊன்கரைந்து சேறுபட
வீசுகுது கெடுநாற்றம்!
துயிலுகையில்
கனவுலகில் நிகழுவன பயங்கரங்கள்!

### கலக்கம்

செத்த பகலின்
சடலம் எரிமூட்டி
விட்டகன்றார் விண் வெளியில்!
சாம்பல் புதையுண்ட
செந்தணல்கள்
காற்றில் மினுங்கூது
நள்ளிரவு!
எங்கேயோ போகின்றாய்
கூறு!

கால்போற திக்கில்
வழி போறன்
கலக்கம் ஒழியட்டும் என்று!

### கழுவுவார் எவருமில்லை

போக்கு வரத்து
மிகுந்த பெருந்தெருவில்
எழுப்பிவிட,
நிலைக்கிறது நெடுங்கல்லாய்
நினைவுச் சின்னம்!

பொறித்த பூவெழுத்தெல்லாம்
பாசியிலும் தூசியிலும்
மறைந்துளதே!
கல்லோடு கல்லாய்க்
கணிக்காது நோக்குகிறார்
மிகச் சிலரே
கழுவுவார் எவருமில்லை!

— நீலாம்பரன் □

திசையின் சிறுகதை

# பருவந் தவறிய மழையைப் போலவே....

குப்பிழான் ஐ. சண்முகன்

இப்போதெல்லாம் பின்னிரவுகளிலேயே உறக்கம் கலைந்து விடுகிறது. நாலைந்து மாதங்களாகத்தான் இந்த நிலை. ஏதேதோ யோசனைகளும் நினைவுகளும் கனவுகளாய் ........பெரிய அவஸ்தையாய் இருக்கிறது. உறக்கம் கலைந்தாலும் எழும்ப முடிவதில்லை. படுக்கையிலேயே அரைமயக்கமாயும் ......... அரை விழிப்பாயும் .........

தூரத்தில் பள்ளிவாசலிலிருந்து சுபுஹூ தொழுகைக்கான பாங்கு ஓசை கேட்கிறது. தொடர்ந்து பறவைகளின் மாலை நேரத்து ஆரவாரங்கள்; ஆலயமணியின் ரீங்காரிக்கும் ஓசை; பக்கத்து அறையில் இருமலும், கொட்டாவியும் —பின்னர் குழந்தைகளை அதட்டி எழுப்பும் சத்தமுமாய் ...... கண்களை மலர விழிக்கின்றான்.

ஜன்னல் சிறகின் இடைவெளியினூடாக ஒளி அறையில் ஊடுருவி இருந்தது. மங்கலொளியில் அறை வான்கோவின் ஓவியம் போல ......... மேசையின் மூலையில் குவியலாய் புத்தகங்கள்; தலை நிமிர்த்தி நிற்கும் ஒரு சாங்கமான மேசை விளக்கு; சுருண்டு கிடக்கும் வயர்ச்சுருள்; தண்ணீர்ப் போத்தல்; கிளாஸ்; சாய்வு நாற்காலி.

இந்த ஞாயிறு விடிகின்ற போதே வெளியே மழை தூறிக் கொண்டிருக்கிறது. இப்போது நாலைந்து நாட்களாய் ஒரே மழைதான். காலையில் மதியத்தில்மாலையிலென்று —சூரியன் முகங்காட்டி சிறிது சந்தோஷத்தைக் கொடுத்து விட்டு—திடீரென சிணுங்கலாக ஆரம்பித்துக் கொட்டும் மழை. இரவின் ஆழத்தில் சங்கீதம் போல ஒரே சீராகப் பெய்யும் மழையில் ஒரு இதம் இருக்கத்தான் செய்கிறது. என்றாலும், இடையின்றி இப்படி மழை பெய்து கொண்டிருப்பது சலிப்பையே தருகின்றது.

காலைக்கடன்களுக்காக வீட்டை விட்டு வெளியே இறங்கவே தயக்கமாகத்தானிருந்தது. ஒரு தென்பில், அசுவாரசியமான நாளாந்த இயக்கத்தில் அது ஒரு கடனாகவே முடிந்து போயிற்று. அவன் இடையிடையே தலையில் முழுகிக் கொள்வானென்றாலும், தொடர்ந்து காலவேளைகளில் மழை பெய்தால் அப்பொழுதெல்லாமுமே தலையில் முழுகிக் கொள்வான். அது ஒரு வித்தியாசமான அனுபவம் போலத் தெரிந்தது. மழையில் தலையில் முழுகல். கிணற்றைச் சுற்றியுள்ள வாழைக் கொல்லையின் இடையே ஓடிய சிறு கொடியில் உடுக்கும் சாறத்தையும் துவட்டும் துவாயையும் போட்டு விட்டால் — வாழையிலைகளில் பட்டுஒன்றாய் உருண்டுதிரண்டு வரும் ஒரிரு மழைத் துளிகளைத் தவிர மழை நனையாது பத்திரமாகவே இருக்கும். இவன் வாளியால் அள்ளி அள்ளித் தலையில் ஊற்றுவான். 'மழையை என்னால் வென்றுவிட முடியும்; மழையை என்னால் வென்றுவிட முடியும்!

முன்னரெல்லாம் அவன் இப்படிச் செய்வதில்லை. மழை வந்தாலே அத்துடன் அந்த ஒற்றைத் தலைவலி வந்துவிடும். மூக்கில்நீர்ஒழுகும்;தொண்டை நோகும்; தொடர்ந்து நெஞ்சைப் பிளக்கிற மாதிரி இருமல் வரும். மழை நாட்களில் குளிக்காமலேயே விடுவான். அப்படிக் குளிக்கின்றதாயினும் தலையைச் சுற்றி இறுகத் துணியால் கட்டி, இரண்டொரு வாளி தண்ணீரை உடம்பில் ஊற்றுவான். தடிமனைத் தடுப்பதற்கான அந்தச் சினத்துப் தேகாப்பியாசத்தைப் பற்றி வீரகேசரியில் படித்த பிற்பாடு, ஒரு நம்பிக்கையுடன் அதைச் செய்யத் தொடங்கினான்; கைகளை வருடி ... ... இமைக்கு மேலால் நெற்றியை வருடி ... ... கழுத்து நரம்புகளை வருடி ... ... முழங்கால் சிரட்டைக்கு மேல் கையை மிண்டு கொடுத்து, உடம்பால் குனிந்து வளைந்து நிமிர்ந்து ... ... ... முன்னரைப் போலல்லாது இப்போது எப்போதாவதுதான் தடிமன் வரும். 'மழையை வென்றாயிற்று ...... மழையை வென்றாயிற்று'

வாழ்க்கையை ... ... ... உன்னைச் சூழ்ந்திருக்கும் ஏமாற்றுக்காரரையும், துரோகிகளையும்,நயவஞ்சகர்களையும்,மீறி— நீ நேசிப்பவர்களை உன்னால் காப்பாற்ற முடியுமா?

நெடுங்காலமாக மறந்திருந்த கடவுளர்களை இப்போது துணைக்கழைக்க வேண்டியதாயிற்று. இப்போது கொஞ்ச நாட்களாக காலைகளில் கண்களை மூடிப் பிரார்த்தனைகள் செய்கின்றான். இந்த ஞாயிற்றுக் கிழமை பிரார்த்தனை செய்யும் போது, கோளறு பதிகத்தைப் படிக்க வேண்டும் போலத் திடீரென மனதில் தோன்றிற்று. 'வேயுறு' தோளிபங்கன் — விடமுண்ட கண்டன் –மிக நல்ல வீணை தடவி —மாசறு திங்கள் கங்கை — முடிமேலணிந்தென் —உளமே புகுந்த அதனால் – ஞாயிறு திங்கள் செவ்வாய் – புதன் வியாழன் ,... ... வியாழன் ... ... ... '

கொஞ்ச நாட்களுக்கு முன்னர்தான் வியாழன் ஒரு இராசியிலிருந்து இன்னொரு இராசிக்கு மாறியிருந்தது. எல்லாருமே ஒரு எதிர்பார்ப்புடன், பரபரப்புடன் அதை எதிர்கொண்டனர். வெளியில் காட்டிக் கொள்ள மாட்டார்கள்; மெத்தனமாக இருப்பார்கள். வருகின்ற தமிழ் வார இதழ்களிலெல்லாம் வியாழ மாற்றப்பலனை இரகசியமாகவே பார்ப்பார்கள், யாராவது அவதானித்தால் ஒரு சிரிப்புச் சிரிப்பார்கள். 'உங்களுக்கு வியாழ மாற்றம் எப்படி' என்பார்கள். சிலர் அக்கறை இல்லாதவர்களைப் போல, அக்கறையாகவே வியாழமாற்றப் பலன்களைப் பற்றி விசாரிப்பார்கள். அவன் அக்கறையாகவே இருந்தான். தமிழ், ஆங்கில பத்திரிகைகளில் எல்லாம் வியாழமாற்றப் பலனைப் பார்த்து — அவற்றின் ஒன்றுக்கொன்று முரணான அபிப்பிராயங்களைப் படித்துக் குழம்பிப் போயிருந்தான். என்றாலும் நல்லகாலம் வரலாமென அவன் எதிர்பார்க்க வைக்கப் பட்டிருந்தான். 'இவ்வளவு காலமும் எனக்கு வியாழன் எட்டில இருந்தது; நான் குழம்பிப் போயிருந்தேன். இப்ப ஒன்பதுக்கு மாறியிருக்கு; குழப்பங்களகன்று நல்ல காலம் வரும்'

நல்லகாலம் வருமெனவே அவனும் நம்பியிருக்கிறான். இந்தத் தொலைதூரத்திலிருந்து ஊருக்கு எட்ட எங்காவது இடமாற்றம் கிடைக்குமென அவன் எதிர்பார்க்கிறான். ஊருக்கு கிடைக்காவிட்டாலும் ஊருக்குக் கிட்ட எங்காவது கிடைத்தால், வார விடுமுறைகளிலாவது ஊருக்குப் போய் வரலாம்; ஊரில் நடப்பவைகளை அறியலாம்; அண்டை அயலில் நடப்பவைகளை அறியலாம்; வீட்டில் நடப்பவைகளை அறியலாம்; உரிமைகளுக்காக சண்டை போடலாம்.

தொலைதூரத்தில் வேலைசெய்பவர்களுக்கு இந்தவார விடுமுறைகளும், பகிரங்க விடுமுறைகளும் பிரச்சினைக்குரிய நாட்களாகவே போய்விடுகின்றன. மேலதிக நேரவேலை செய்யத்தக்கவையாகவோ, அல்லது பதில் விடுமுறைக்காக வேலை செய்யத் தக்கவையாகவோ அமைந்துவிட்டால் பரவாயில்லை தான். பிரமச்சாரிகளுக்கு அவை சந்தோஷம் தருகின்ற நாட்களாக அமைந்து விடலாம் குடும்பத்துடன் வசிப்பவர்களுக்கு அவை நட்பு நாட்களாகலாம். அவனைப் போன்றவர்களுக்கு அவை பாரமான நாட்கள்; என்ன செய்வதென்று தெரியாது தவிக்க வைக்கின்ற நாட்கள்; மிகுந்த பணச் செலவை வேண்டி நிற்கின்ற நாட்கள்; நிம்மதியைத் தராத நாட்கள்.

மழை தூறிக்கொண்டிருக்கிற இந்த ஞாயிற்றுக் கிழமையில், பதில் விடுமுறைக்காக வேலை செய்வதற்கான ஒரு நிச்சயமற்ற ஏற்பாடு ஏற்கனவே செய்யப்பட்டிருந்தது. அலுவலகத்தில் கையெழுத்து வைத்துவிட்டு வேலை செய்யலாம்— செய்யாதும் விடலாம். அது போல லீவு கிடைக்கலாம்— கிடைக்காதும் விடலாம். ஆனால் கையெழுத்து வைக்காது விட்டால் லீவு அறவே கிடைக்காது போகலாம். அவன் மழையைப் பாராது புறப்பட்டான். முழங்காலளவிற்கு மடித்த முழுக்காற்சட்டை; நீலக் குடை; பைல் கவருக்குள் பழைய பத்திரிகைகள்; காலைக் கடித்துக் கொண்டிருக்கும் புதுச் செருப்பு.

இப்போது நாலைந்து நாட்களாகவே பெய்யும் மழையில் பூமி ஊறிச் சிலிர்த்திருக்கிறது. பாதையில் இடையிடையே கால் பதித்து நடக்க முடியாமல் வெள்ளம் தேங்கிக் கிடக்கிறது! வீதியை ஊடறுத்து குளத்தை நோக்கி ஓடும் வெள்ளத்தினால் வீதி குண்டும் குழியுமாய், கற்கள் மிதந்து போய் பரிதாபமாய்க் கிடக்கிறது; முற்றி விளைந்த நெற்கதிர்கள், காலம் தவறிய மழையினால் தேங்கி நிற்கும் வெள்ளத்தினுள் தலை சாய்த்துக் கிடக்கின்றன. குளத்தை நோக்கி விரைந்தோடும் வெள்ளத்தில் கண்ணை ஈர்க்கும் ஒரு கவர்ச்சி இருக்கிறதுதான். தூரத்துக் குளத்து மேட்டில்—புகார் மூடிய வானத்துச் சரிவின் பின்னணியில் சந்தோசமாக நாலைந்து எருமைகள்.



மழை பெய்து கொண்டிருக்கிற வார விடுமுறை நாட்கள் இதமானவை போலும். கட்டுப்படுத்தப்பட்ட அன்றாட இயந்திர இயக்கத்தினின்றும் கிடைக்கும் விடுதலைக்கு, மழைக்கால ஓய்வு நாட்கள் புதிய ஒரு மெருகையும் பரிமாணத்தையும் கொடுக்கின்றன போலும். மழைக் குளிரின் சுகத்தில் விடிய விடிய கதகதப்பான படுக்கையில் புரண்டு புரண்டு படுத்தல் சுகம்; மிகு சுகம். குடும்பஸ்தனான அலுவலகச் சேவகன் அலுவலகத்தைத் திறக்கவில்லை. அலுவலகத்திலேயே யாருமில்லை. ஆளரவமற்று வெறிச்சோடிப் போயிருந்த அலுவலகத் தாழ்வாரத்தில் நாலைந்து மாடுகள் தான் மழைக்கு ஒதுங்கிப் போய் நின்றிருந்தன. மழை ஒரே சீராகப் பெய்து கொண்டிருந்தது!

பரந்த பெரிய மைதானத்தில் கால்வாசிப் பகுதியை ஆக்கிரமித்துக் கொண்டு, திட்டுத் திட்டாகக் கிடக்கும் அலுவலகக் கட்டிடத் தொகுதிகள் --ஆளரவமேயில்லாமல் மாடுகளுடன் அவன் மட்டுமே தனியனாய். மற்ற நாட்களில் எல்லாம் எத்தனை பேர் வருவார்கள்; எத்தனை கதைகள்; எத்தனை பேச்சுக்கள்; எத்தனை சிரிப்புகள்; எத்தனை வேதனைப் பெருமூச்சுக்கள்; எத்தனை ஆணவம். மிடுக்கு. அதிகார உறுமல்கள். அத்தனையும் இல்லாத மழை பெய்கின்ற ஞாயிற்றுக் கிழமை.

தாழ்வாரத்தில் அவனுடன் ஒதுங்கியிருந்த பெரிய மாடொன்று வாலை உயர்த்தி மூத்திரம் பெய்தது. சீமெந்து நிலத்தில் பட்ட அது அவன் மேலும் தெறித்தது. வீச்சான ஒரு மணம் அவன் புலனை ஊடுருவிப் போயிற்று. அவனும் இயற்கை உபாதைப்படுத்துவது போல உணர்ந்தான். இயற்கை உபாதையைத் தீர்ப்பதானால் தண்ணீர் வேண்டும். தண்ணீருக்கு என்ன செய்யலாம்? கொட்டும் மழையிலும் ஒரு வாளி தண்ணீருக்கான தவிப்பு.

அலுவலகத்தில் சிவப்பு வர்ணத்துடன் உயர்ந்து நிற்கும் நீர்த்தாங்கி; அங்கு மிங்குமாய் ஓடும் பைப் லைன்கள்; போதாததற்கு மேலும் மேலுமாய் புதிய பைப்லைன்களும்—வோஷ் பேசின்களும். தண்ணீர்வராத பைப் லைன்கள் எப்போதோ பழுதான, பம்ப் பண்ணுகின்ற இயந்திரம் இன்னமும் திருத்தப்படவில்லைப்போலும். திரும்பத் திரும்ப வற்புறுத்தப் பட்டால் எப்போதோ திருத்தப்படப் போகின்ற இயந்திரம். ஒருபோது ஆள் இருக்காது; ஒரு போது திருத்தும் கருவிகள் இருக்காது; ஒரு போது உடைந்த கருவிகளை மாற்றுவதற்கான பதிலீடுகள் இருக்காது; ஒருபோது குறித்த அலகேஷனில் ஒதுக்கிய பணத்தை இதற்கு மாற்ற முடியாது; 'எல்லாம் ஒழுங்காக நடக்க வேணும்; எல்லாம் சட்டப்படி நடக்க வேணும்; எல்லாம், நேர்மையாக நடக்க வேணும்; ஆளுக்காள் வித்தியாசம் பார்க்கக் கூடாது.'

ஒருவாளி தண்ணீருக்கு என்ன செய்யலாம்?

ஒரு யுக்தி தோன்றிற்று. பாத்ரூமில் இருந்த வாளியை — நல்ல வேளை வாளி இருந்தது —எடுத்துவந்து கூரையால் ஒழுகும் பீலியின் கீழ் வைத்தான். இரண்டொரு வினாடியில் வாளி நிரம்பிற்று. 'அவன் தங்கியிருக்கும் பழைய காலத்து பெரிய கல்வீட்டின்'—பழைய காலத்து மலசலகூட வசதிகள் —பீலியால் ஒழுகிய நீர் உபாதையைத் தீர்க்க உதவிற்று.

இரவு நேரங்களிலும், விடுமுறை நாட்களில் பகல் நேரத்திலும் கூட, அலுவலகத்தைக்

(11ஆம் பக்கம் பார்க்க)

# பெண் நிலைவாதம் வெற்றுக் கோஷமா?




பெண் நிலைவாதம், பெண் விடுதலை என்பன இன்று எம்மவர் மத்தியில் பழக்கமான, பரவலான சொற்தொடர்களாகிவிட்டன. எனினும் இச் சொற்தொடர்கள் அவற்றுக்குரிய சரியான அர்த்தத்தில் இன்னும் புரிந்து கொள்ளப்படவில்லை என்பது மிக விசனத்துக்குரியது. சமீப காலங்களில் வெளிவந்த பத்திரிகைக்கட்டுரைகள், தலையங்கங்கள் என்பன இவ் விளக்கமின்மையின் பிரதிபலிப்புகளாகும். பெண் விடுதலைக் கோஷங்கள் எமது சமூகத்தில் பொருத்தமற்றவை, பெண் அடக்குமுறை,



ஆண் மேலாதிக்கம் ஆகியவை எமது சமூகத்தில் நிலவவில்லை, ஏனைய சமூகங்களுடன் ஒப்பிடும் போது எமது சமூகத்தில் பெண்களின் நிலை திருப்திகரமானது போன்ற கருத்துகளாக அவை வெளிப்படுகின்றன. இக்கருத்துகள் மேலோட்டமான சிந்தனையினதும், சுய திருப்தி மனோபாவத்தினதும் வெளிப்பாடுகளாகும்.

இது மாத்திரமன்றி, இத்தகைய கருத்துகள், பெண் அடக்கு முறை என்பது யாது? அது எவ்வகையிற் செயற்படுகின்றது? எமது சமூகத்தில் அதன் பௌதீக கருத்து நிலை அடிப்படைகள் (Material and ideological base) என்பவை யாவை? என்பது குறித்த அறியாமையினாலும், பெண்விடுதலை குறித்து பெண்நிலை வாதிகள் முன்வைக்கும் கருத்துகள் பற்றிய விளக்கமின்மையாலும், எழுபவையுமாகும்.

இத்தகைய கருத்துகளை முன்வைப்போர் அடிக்கடி காட்டும் காரணம், பெண்கள் ஆண்களுடன் சமமாகக் கல்வி கற்கின்றனர், சில பகுதிகளில் ஆண்களை விட அதிகமான பெண்கள் கல்வி கற்கின்றனர் என்பதாகும். பெண்கள் சம உரிமையின் ஒரு தீர்மானமான அளவுகோலாக அவர்கள் இதனைக் கருதுகின்றனர்.

ஆனால், இன்று பல்கலைக்கழகத்தில் கூட ஆண்களிலும் அதிகளவான பெண்கள் கல்வி கற்பது என்பது சூழ்நிலைகளின் நிர்ப்பந்தங்களினால் தவிர, சமூகத்தின் தேர்வினால் அல்ல என்பது எமது அரசியல், சமூக நெருக்கடிகளைப் புரிந்து கொள்வோர்க்குப் புலப்படுவதாகும்.

கல்வி கற்பது, வேலை பார்ப்பது என்பது சமூகத்தில் நிலவும் ஆண்மேலாதிக்கக் கருத்து நிலையை எவ்விதத்திலும் மாற்றியமைக்கவில்லை.

இன்னும் பெண்கள், ஆண்களுக்குக் கீழ்ப்படிவு உடையவர்களாகவும், ஆணைச்சார்ந்து வாழ வேண்டியவர்களாகவுமே கருதப்படுகின்றனர். மனைவி, தாய் ஆகியவையே பெண்ணுக்குரிய இயல்பான பாத்திரங்களாகக் கொள்ளப்படுகின்றன. இந்தப் பாத்திரங்கள்தான் எமது சமூகத்தில் ஒரு பெண்ணின் இருப்பை உறுதி செய்கின்றன. இதனால் தான் எவ்வளவு கல்வி கற்பினும் வெளியில் போய் வேலை செய்யினும், பெண்களது இந் நிலைமை,ஸ்தாபனங்களில்அவர்களால் பிரதிநிதித்துப்படுத்தப்படுவதில்லை. அரசியல் ஸ்தாபனங்களிலோ, அறிவியல் நிலையங்களிலோ, இலக்கியச் சங்கங்களிலோ பெண்களின் பிரசன்னமும், செயற்பாடும் மிக மிக அரிதாக இருப்பது ஏன்? பெரும்பான்மையினராக இருந்தும் சிறுபான்மையினராகவே வெளித்தெரியும் இந்நிலை, ஆண் பெண் என பாலடிப்படையின் பாரபட்சத்தினதும் பெண் இரண்டாந்தரப் பிரஜையாகக் கருதப்படுவதினதும் வெளிப்பாடாகும்.

ஆண்களிலும் பெண்கள் அந்தஸ்தில் குறைவானவர்களாகக் கருதப்படுதல், குடும்ப அமைப்பினுல் சுரண்டப்படுதல், தொழிலிலும் சமூகத்திலும், நாட்டின் கலாசாரத்திலும் குறைவான அந்தஸ்து, உற்பத்தியிலும் சந்ததி உற்பத்தியிலும் ஈடுபடுவதால் ஏற்படும் இரட்டைச் சுமை ஆகியவற்றை தமிழ்ச் சமூகத்திற்குப் பெண்நிலைவாதம் பொருத்தமற்றது என்போர் கவனத்தில் கொள்வதில்லை.

இது தவிர பெண்களுக்கெதிரான வன்செயல்கள் பற்றி பலரும் பேசவே தயங்குகின்றனர். பொது இடங்களிற் பெண்களைத் தொந்தரவு செய்வதிலிருந்து இராணுவப் பலாத்காரம் வரை இவ்வன் செயல்கள் பல்வகையின. சமூகம், இக் குற்றம் புரிந்தோரைக் கண்டிப்பதை விடுத்து குற்றத்துக்கு இலக்கான பெண்களையே கண்டிப்பதையும் அவமதிப்பதையும் காணலாம். பெண்ணுடைய அடக்கமின்மையாலும், பிழையாலும்தான் இத்தகைய சம்பவங்கள் நடக்கின்றன என்று, வெவ்வேறு சந்தர்ப்பங்களிற் பலர் கூறக் கேட்டிருக்கிறேன். குற்றத்திற்கு இலக்கான பெண்களும் இத்தகைய கருத்துக்களால் பாதிக்கப்பட்டு தம்மீதே குற்ற உணர்வு கொண்டு மன அழுத்துதல்களுக்கு ஆளாகின்றனர். இத்துடன் தனித் தனிக் குடும்பங்களுக்குள் நடக்கும் விவகாரங்களாகச் சில வன்முறைகள் மூடிமறைக்கப்படுகின்றன. பெண் பிள்ளைகளையும் மனைவியரையும் ஏசுதல், அடித்தல் போன்றன இவை. பெண்களும் இவை பற்றி வெளியே கூறுவதில்லை. வெளியே தெரிய வந்தால் தமது கௌரவம், குடும்ப கௌரவம் ஆகியவை பாதிக்கப்படும் என இவர்கள் கருதுகின்றனர். காலாதிகாலமாகக் கற்பிக்கப்பட்டு வந்த பொறுமை, அடக்கம் என்ற குணும்சங்களால் கட்டுப்படுத்தப்பட்டு உள்ளுக்குள்ளேயே வெந்து குமையும் பெண்கள் அனேகம். இத் "தனிப்பட்ட விவகாரங்கள்" பெண் அடக்குமுறையின் அம்சங்களாகும். இவை சமூக அரசியல் நிலைகளின் பிரதிபலிப்புகள்தாம். இவை யாவற்றையும் கருத்தில் கொண்டே "அக விஷயங்களும் அரசியல்தான்" (Personal is Political) என்ற சுலோகத்தை நவீன பெண் நிலைவாதம் முன்வைக்கிறது.

சமூகத்தில் கல்வி அறிவின் அதிகரிப்பினுலும், கிராமங்கள் நகரங்களாக வ்ளர்ச்சியடைவதாலும் பெண் அடக்குமுறையின் அம்சங்கள் தளர்ந்து மறைந்து போய்விடும் எனச் சிலர் கருதுகின்றனர். கல்வி முன்னேற்றமும் நகரவாழ்க்கையின் சில 'அம்சங்களும் பெண்கள் தொடர்பான சில கட்டுப்பெட்டி அபிப்பிராயங்களைத் தளர வைத்துள்ளன என்பதை மறுப்பதற்கில்லை. எனினும் இவற்ருல், பெண்களுடைய இரண்டாந்தர நிலையில் அடிப்படை மாற்றங்களை ஏற்படுத்த முடியாது என்பதற்குச் சர்வதேச அனுபவங்கள் சான்று பகருகின்றன. கல்வியறிவில் முன்னேற்றமும் நகரங்களும் அதிகரித்துள்ள மேற்கு நாடுகளில், பால்ரீதியான வேலைப்பாகுபாடு மறைந்துவிடவில்லை; பெண்களுக்கு எதிரான வன்முறைகள் குறைந்துவிடவில்லை. மாருக இவை அதிகரித்துள்ளன. மேற்கு நாடுகளின் அபிவிருத்தி முறையை (Development model) முன்னுதாரணமாகக் கொள்ளும் போது, இதனை நாம் கவனத்திற் கொள்ள வேண்டும்.

பெண்களது உழைப்புச்சக்தி சுரண்டப்படுதல், பெண்களது அடக்குமுறை ஆகியன இன்று முதலாளித்துவ விருத்தியுடனும் ஆண் மேலாதிக்க முறைமையுடனும் பின்னிப் பிணைந்துள்ளன. உலக சந்தையில் பெண்கள் மலிவான உழைப்புச் சக்தியாகப் பயன் படுத்தப்படுகின்றனர். இலங்கைப் பெண்கள் இன்று மத்திய கிழக்கு நாடுகளுக்கு எத்தகைய வேலைப்பாதுகாப்புமற்று வேலையாட்களாகச் செல்வதும், சுதந்திரவர்த்தக வலயத்தில் எத்தகைய தொழிற்சங்க உரிமைகளுமற்று தொழிலாளர்களாக இருப்பதும், இதற்கு உதாரணங்களாகும். தமிழ்ப் பெண்கள் இந்நிலைமைகளில் இருந்து தப்பியுள்ளனர் என்று சிலர் வாதிடலாம். அரசியல் நெருக்கடிகளினுலும், இராணுவ வன்முறைகளாலும் ஆண்கள் தொகை குறைந்து போக முன்னரிலும் அதிகளவான பெண்கள் குடும்பத்தின் பிரதான உழைப்பாளராக மாறியுள்ள எமது சூழல், பெண்களின் மீது எத்தகைய சுமைகளை ஏற்றப் போகின்றதோ?

பொருளாதாரம், பால் ஆகியவற்றின் அடிப்படையில் அசமத்துவம் நிலவுகின்ற சமூகத்தில், ஒடுக்குமுறையும் சுரண்டலும் சட்டத்தினுல் மாத்திரம் அகற்றி விடக் கூடிய சமூகத்தீமைகளல்ல என்பதை, யாவரும் உணர்ந்து கொள்ள வேண்டும். எனவேதான் பெண்கள் இயக்கம் என்பது சம உரிமைகளுக்கான ஜனநாயகப்போராட்டமாக மாத்திரமல்லாது, தீவிரமான சமூக மாற்றத்துக்குரிய போராட்டமாகவும் அமைகிறது. ஆனுல் அதே சமயம் சோசலிச உற்பத்தி முறை நிலவும் சமூகங்களிற் கூட தொடர்ந்து எதிர்க்கப்படாவிடின் ஆண் மேலாதிக்க முறை தொடரும் என்பதை சமகால அனுபவங்கள் புலப்படுத்துகின்றன. இதனுலேயே சம உரிமைகளுக்கும் அப்பால் பெண் அடக்குமுறையின் பல்வேறு பகுதிகளான அரசு, சமயம், திருமணம், குடும்பம் ஆகியன பற்றி நவீன பெண்நிலை வாதிகள் வினுவெழுப்பியுள்ளனர். சுருக்கமாகக் கூறின் வாழ்வின் சகல பகுதிகளிலும் காணப்படும் பெண் அடக்குமுறை பற்றிய கூர்மையான விழிப்புணர்வும், விட்டுக் கொடுக்காத போராட்டங்களும் எத்தகைய சமூக பொருளாதார அமைப்பிலும் தொடர்ந்தாலன்றி, பெண் விடுதலையின் முழுப்பரிமாணத்தையும் நாம் எட்டி விடுதல் முடியாது. □

சித்ரா

## வடக்கு கிழக்கு...

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

### தீர்விற்கான அவசியம்

இறுதியாக, குடித்தொகை இயக்கம் பாதிப்புகளுக்கு நாம் உடனடித் தீர்வுகாண வேண்டுமெனில், இலங்கையின் அரசியல் பிரச்சினை உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டும். இப்பிரச்சினையைத் தீர்க்க உடனடியாக சமூக, பொருளாதார நிலையை உயர்த்துவது மட்டும் போதாது. அரசியல் தீர்வுதான் வடக்கு, கிழக்கு மாகாணத் தமிழரின் வாழ்வினை வளமாக்கும்.

O இலங்கை அரசாங்கம் குறுகிய அரசியல் லாபங்களை விட்டு, தமிழரும் இந்நாட்டு பிரசைகள் என்பதையும்,அவர்களுடன் நீண்டகாலமாக வாழ்ந்து வந்தது போல மேலும் நீண்டகாலம் வாழ வேண்டும் என்பதையும் மனதில் கொண்டு, இனப்பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வு காணல் வேண்டும்.

O குடித்தொகை பாதிப்பிலிருந்து விடுபட இந்திய அரசும் கூடிய கவனம் செலுத்த வேண்டும். இப்பிரச்சினையைத் தீர்க்க இந்தியாவினுல் முடியும். புத்தர், காந்தி பிறந்த நாடான இந்தியா அகிம்சை வழியில் தீர்வுகண்டு தமிழரின் இவ்அவல நிலையைப் போக்குதல் வேண்டும்,

O கடந்த சில மாதங்களாக வடக்கு, கிழக்கு வீதிகளில் இடம்பெறும் இறப்புகள், கவலை தருவதாகவுள்ளது. இவ்வகை இறப்புக்களுக்கு யார் பொறுப்பாகவிருந்தாலும், இறப்பவர்கள் தொழில் வாய்ப்பில் ஈடுபடக்கூடியவர்கள் என்பதைக் கருத்திற் கொள்ள வேண்டும். பல்வேறு வழிகளில் இறப்புக்களுடன் இத்தகைய இறப்புக்களும் வடக்கு—கிழக்கு பிரதேச பொருளாதாரத்தைப் பாதிப்பது மட்டுமல்லாது, இப்பிரதேசத்தினுள் தொழில்வாய்ப்பினைக் காரணங்காட்டி வெளியார் உள்வரவாய்ப்பை ஏற்படுத்தி வைத்துவிடும். எமது மக்கள், பிரதேச ஒருமைப்பாடு, பொருளாதார வளர்ச்சி, ஆகியவற்றில் அக்கறை கொள்ளுதல் அவசியமாகும்.

O பாதிப்படைந்துள்ள குடித்தொகைக் கணிப்புகளைச் சீராக்க வடக்கு - கிழக்கு வாழ் தமிழர்கள் யாவரும் பல்வேறு வழிகளில் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். இதற்கு பிராந்திய ரீதியில் குடித்தொகைக் கொள்கையில் (population policy) மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்.

O கடந்த மூன்று மாதங்களாக, ஐரோப்பிய நாடுகளுக்கு 16 வயதுக்குட்பட்டவர்கள் செல்வதற்கு அவ்வவ் நாடுகளின் உள்வரவுக் கட்டுப்பாடுகள் குறைவாக இருப்பதை உணர்ந்த எமது மக்கள், தமது பிள்ளைகளின் படிப்பினை இடைநிறுத்திவிட்டு அனுப்பிவிடுகின்றனர். இவை அவர்களின் எதிர்கால வாழ்வினைச் சீரழிக்கும் என்பதைப், பெற்ருேர் உணருதல் வேண்டும். □

கறுப்பு நிற பசுக்கள், பச்சை நிறப் புல்லைத் தின்று வெள்ளைப் பால் தருகிறதே, எப்படி!

O O

"காசு— அதை ஒவ்வொருவரும் எங்கே பார்க்க முடியும்?"

"அகராதியில்" □

# தீபெத் தேசியஇன நெருக்கடியில் மா சே துங்கும் நேருவும்

## உலகும் உலகில்

ஒரு நாட்டில் சிறுபான்மையினராக வாழும் ஒரு தேசிய இனத்தின் பிரச்சினையில், அக்குறித்த இனத்தின் பிரச்சினை மட்டும் இடம்பெறும் என்றில்லை. அப்பிரச்சினையில் பல்வேறு உள்நாட்டு, வெளிநாட்டுக் காரணிகளும் முட்டிமோதி அப்பிரச்சினையினைப் பூதாகரமாக்கி விடுகின்றன. இந்தவகையில் தீபெத் பிரச்சினையைச் சற்று ஆராய்வோம்.

திபெத்தியப் பிரச்சினையானது அத்தேசிய இனம் சார்ந்த பிரச்சினையாகவும், சீனாவின் ஆதிக்கம் பாதுகாப்பு என்பன சார்ந்த பிரச்சினையாகவும், சீன கொம்யூனிஸ்ற் கட்சியின் அரசியல் ஆதிக்கம் சார்ந்த பிரச்சினையாகவும், அயல்நாடு சார்ந்த பிரச்சினையாகவும், ஏனைய வெளி அரசுகளின் தலையீடு சார்ந்த பிரச்சினையாகவும் பல பரிமாணங்களையும் பெற்றுள்ளது.

இவற்றினை விளக்குவதற்கு திபெத்தியப் பிரச்சினையின் ஆரம்ப அம்சங்கள் சிலவற்றை நோக்குவோம்.

தீபெத், கி.பி 8 ஆம் நூற்றுண்டு வரை தனி இராச்சியமாக இருந்தது. பின்பு கி.பி. 8 ஆம் நூற்றுண்டில், சீனு தீபெத்தைக் கைப்பற்றித் தன்னுடன் இணைத்துக் கொண்டது.

தீபெத்திய மக்கள் தாம் தனித்துவமான தேசிய இனமென்றும், சீனுவிலிருந்து பிரிந்து தனி அரசாகிவிட வேண்டுமென்றும் எப்பொழுதும் எண்ணியும், இடையிடையே போராடியும் வந்தனர். 1911 ஆம் ஆண்டு குடியரசு கோரி, சீன முடியரசுக்கெதிரான புரட்சி சீன தேசமெங்கும் வெடித்தது. இந்நிலையில் சீன அரசு பெரிதும் பலவீனப்பட்டது. இதேவேளை தீபெத்தியரும், தாம் தனிநாடாகப் பிரிந்து செல்லப் போராடினர். இதே காலத்தில் இந்தியாவை ஆட்சிபுரிந்துவந்த பிரித்தானியர், இந்தியாவைப் பாதுகாப்பதற்கு திபெத்தை ஒரு யுத்தத் தடுப்பு வலயமாக்கும் நோக்கத்துடன், திபெத்தியருக்குச் சகல வகைகளிலும் உதவி புரிந்தனர். சீன மத்திய அரசு சீர்குலைந்த நிலையில், ஒருபுறம் முடியரசு (மத்தியில்) கவிழ்ந்தது; மறுபுறம், தீபெத் 1911 ஆம் ஆண்டு சீனுவிலிருந்து விடுபட்டு ஒரு தனி அரசாகியது.

பின்பு சீனுவில் 1949 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் மா சே துங் தலைமையிலான சீன கொம்யூனிஸ்ற் கட்சி ஆட்சிக்குவந்தது. அது 1950 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் தீபெத்தின்மீது மேற்கொண்ட இராணுவ நடவடிக்கையின் மூலம், தீபெத்தைச் சீனுவுடன் இணைத்துக் கொண்டது. அவ்வாறு தீபெத்தைச் சீனுவுடன் இணைததுக்கொண்ட மா சே துங்கின் நடவடிக்கையை, அன்று இந்தியப் பிரதமராயிருந்த ஜவஹர்லால் நேரு அங்கீகரித்தார். சோவியத் யூனியனும் அங்கீகரித்தது; அமெரிக்கா இதனை வன்மையாக எதிர்த்தது.

காஷ்மீரில் தமது இராணுவ நடவடிக்கையை நியாயப்படுத்திய நேரு, தீபெத்தினுள் சீனுவின் இராணுவ நடவடிக்கையையும் நியாயமென்று கூறினர். ஆனுல் இந்தியாவின் பாதுகாப்புத் துறை ஆலோசகர் மத்தியில், நேருவின் இந்நிலைப்பாட்டிற்குப் பெரும் எதிர்ப்பு இருந்தது. தீபெத் தனி அரசாக இருப்பதன் மூலம் இந்தியாவைப் பாதுகாப்பதற்கான ஒரு யுத்தத் தடுப்பு வலயமாக விளங்குகின்றதென்றும், அது சீனுவின் ஒரு பகுதியாக ஆக்கப்பட்டதனுல் அந்தநிலை மாறிவிட்டதென்றும், எனவே எதிர்காலத்தில் சீனு இந்தியாமீது தீபெத்திற்கு ஊடாகப் படையெடுக்கும் என்றும், பாதுகாப்பு ஆலோசகர்கள் வற்புறுத்தினர். இந்த எதிர்ப்புக்களையெல்லாம் சமாளித்து சீனுவுடன் சுமுக உறவைப் பேண, நேரு சில முயற்சிகளைச் செய்தார். 1954 ஆம் ஆண்டு சீனப் பிரதமர் சூ என் லாய் இந்தியாவிற்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டார். அப்போது பஞ்சசீலக் கொள்கையின் அடிப்படையில், சீன—இந்திய கூட்டுப் பிரகடனம் வெளியிடப்பட்டது. அப்பஞ்சசீலத்தில், அனுக்கிரமிப்பும் உள்நாட்டுப் பிரச்சினையிற் தலையிடாமையும் முக்கிய இரண்டு சீலங்களாகும்.

இக்கால கட்டத்தில், ஒரு புறம் சீன மத்திய அரசின் பிடி தீபெத்தில் மேலும் மேலும் அதிகரித்து வந்தது. மறுபுறம், இதற்கெதிரான தீபெத்தியரின் போராட்டமும் அதிகரித்து வந்தது. இந்நிலையில் சீன ஆட்சியாளரின் கடும் போக்கை ஆட்சேபித்து, தீபெத்தியர்களுக்கு மாநிலசுய ஆட்சி அதிகாரம் வழங்கப்பட வேண்டுமென, நேரு வற்புறுத்தத் தொடங்கினுர். 1957 ஆம் ஆண்டு, 14 ஆம் தலாய்லாமா தலைமையில் தீபெத்தில் கிளர்ச்சி வெடித்தது. அப்போது சீன அரசு கடும் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டது. 14 ஆம் தலாய்லாமாவும் அவரது முக்கிய குழுவினரும் தப்பி ஓடி இந்தியாவில் சரண் புகுந்தனர். ஏறக்குறைய ஓர் இலட்சம் தீபெத்தியர்கள் இந்தியாவுள் அகதிகளாய்ப் பிரவேசித்தனர். இவர்களில் பெரும்பாலானோர் இந்தியாவில் ஆயுதப் பயிற்சி பெற்று, பின்பு தீபெத்துள் கெரில்லாப் போராட்டத்தில் பங்கெடுத்தனர். தலாய்லாமாவிற்கு இந்தியா தஞ்சமளித்திருப்பதும், அங்கிருந்து தீபெத்தியக் கெரில்லாக்கள் தீபெத்துள் பிரவேசித்து ஆயுதம் தாங்கிய நடவடிக்கையில் ஈடுபடுவதும், சீன ஆட்சியாளர்களிற்குப் பெருந்தலையிடியாய் அமைந்தது. இதனுல் சீன ஆட்சியாளர் நேரு ஆட்சி மீது சினங்கொண்டு, பெரும் கண்டனங்களை வெளியிடத் தொடங்கினர்.

ஒரு புறம் இவ்வாறுஅமைய, மறுபுறம் சீனக் கொம்யூனிஸ்ற் கட்சி உள்நாட்டுரீதியான பல பிரச்சினைகளை எதிர்கொள்ள நேர்ந்தது. அதனது பொருளாதாரத் திட்டங்கள் வெற்றியளிக்கவில்லை. இவற்றை நிவர்த்தி செய்வதற்காக பெரும் பொருளாதார முன்பாய்ச்சல் திட்டம் ஒன்றை வகுத்து, அதனை நடைமுறைப்படுத்தியது. ஆனுல் அதுவும் வெற்றியளிக்கவில்லை. இதனுல் நெருக்கடிகள் கட்சிக்குள்ளேயே வளரத் தொடங்கின. அதேவேளை 1959 ஆம் ஆண்டு சோவியத் யூனியனுடனுன சீன உறவில் பெரும் வெடிப்பேற்பட்டது. அத்துடன், சோவியத் உதவிகள் நிறுத்தப்பட்டன. இவற்றுல் மா சே துங்கிற்கு எதிரான உள்கட்சிப் போராட்டமும், உள்நாட்டுப் பிரச்சினைகளும் அதிகரித்தன.

சர்வதேசி

எனவே மா சே துங் தனக்கெதிரான உள்கட்சிப் போராட்டத்தையும், உள்நாட்டுப் பிரச்சினைகளையும் திசை திருப்புவதற்கு, வெளிநாட்டுடனுன போர் ஒன்று அவருக்கு அவசியப்பட்டது.

நேருவின் நிலைப்பாடுகள் இதற்கான வாய்ப்பைக் கொடுத்தன. மக்மோகன் எல்லைக் கோட்டுப் பிரச்சினை இதற்குப் போதிய சாட்டாக அமைந்தது. 1954 ஆம் ஆண்டு சீன—இந்திய கூட்டுப்பிரகடனத்தில் இந்த எல்லைக் கோட்டுப் பிரச்சினையை சீனு பிரஸ்தாபிக்காது விட்டிருந்தது. ஆனுல், இப்போது அதனைச் சாட்டாக எடுத்து சீன—இந்தியப் போர் 1962 ஆம்ஆண்டு வெடித்தது. 1950 ஆம் ஆண்டு, பாதுகாப்பு ஆலோசகர்கள் நேருவிற்கு குறிப்பிட்டிருந்தது போலவே, தீபெத்திற்கு ஊடாகச் சீனப் படைகள் இந்தியாவினுள் புகுந்தன. அன்று அந்த யுத்தத்தில் ஏறக்குறைய இலங்கையின் பரப்பளவு நிலத்தைச் சீனு கைப்பற்றி, இன்னும் தனது கட்டுப்பாட்டின்கீழ் வைத்திருக்கின்றது.

இந்தியாவைப் பிரித்தானியர் ஆட்சிபுரிந்த காலத்தில் பிரித்தானியரால் போடப்பட்ட எல்லைக்கோடே, மக்மோகன் எல்லைக் கோடாகும். இந்த எல்லைக்கோடு விவகாரத்தில் பிரித்தானியர் ஒரு பிழையான எல்லையை அமைத்துள்ளனர் என்ற சீனுவின் கருத்தில், ஓரளவு உண்மையுண்டு. ஆனுல் மா சே துங் இந்த எல்லைக் கோட்டுப் பிரச்சினையை போரிற்கான பிரதான காரணியாகச் சொல்லிக் கொண்டாலும், உண்மை அதுவல்ல. ஒரு போரிற்கு சில வெளிப்படைக் காரணிகள் அல்லது சில சாட்டுக்கள் தெரியலாம். ஆனுல் உண்மை அவையல்ல. இங்குள்ள பிரதான உண்மை மா சே துங்கிற்கு ஏற்பட்ட உள்நாட்டு நெருக்கடியைத் திசை திருப்புதல், உப உண்மை தீபெத்தியப் பிரச்சினையில் நேருவின் நிலைப்பாடு.

மா சே துங்கின் இத் திசை திருப்பும் நடவடிக்கை நீண்ட காலம் நிலைக்க முடியவில்லை. ஆதலினுற்தான் தனக்கு எதிராக கட்சிக்குள்ளும், நாட்டுக்குள்ளுமிருந்து வந்த எதிர்ப்பை சமாளிப்பதற்கு பின்பு கலாசாரப் புரட்சி என்னும் நடவடிக்கையில் ஈடுபட்டார். தனது தலைக்கு எதிராக வந்த கிளர்ச்சியை, மிகத் தந்திரமாக கட்சியிலுள்ள ஏனையவர்கள் மீது திசைதிருப்பினுர். ''தலைமைப்பீடத்தைத் தாக்குங்கள்'' என்ற கோஷத்தை தானே முன்வைத்து கலாசாரப் புரட்சிக்குத் தலைமை தாங்கினுர் என்பதும், இந்த இடத்தில் குறிப்பிடுவது பொருத்தமானது.

இந்தப் போருடன், தீபெத்தியப் பிரச்சினையும் வெளியுலகின் கவனத்தை இழந்தது; போர்ச் சூழலில் அது மறைந்து போனது. இப்போரின் பெயரால் தீபெத்துக்குள் சீனுவின் பெரும் படைநிலைகொண்டது; அதனுல் தீபெத்தியர்களை நசுக்குவதும் சாத்தியமானது. ''நவீனமயமாக்கல்'' என்பதன் பெயரில் தீபெத்தியரின் கலாசாரத் தனித்துவ அம்சங்கள் சிதைக்கப்பட்டன. சீனமயமாக்கல் துரிதப்படுத்தப்பட்டது. இத்தொடர்ச்சிக்கு எதிரான குறைந்தபட்சப் போராட்டமும், அதற்கெதிரான அரசின் நடவடிக்கைகளுமே இன்றைய தீபெத்தியப் பிரச்சினையின் போக்கை நிர்ணயிந்துள்ளன.

சீனு, தேசிய ரீதியில் தன்னைப் பலப்படுத்துவதற்காகவும், பாதுகாப்பதற்காகவும் தீபெத்தை 1950 ஆம் ஆண்டு தன்னுடன் இணைத்து, சீனமயமாக்கலைப் படிப்படியாக மேற்கொண்டது. இதனுல் சீனுவின் தேசிய ஆதிக்கக் கொள்கை தீபெத்தின் இனப் பிரச்சினையில் பிரதிபலித்ததுடன், சீனு—இந்தியா ஆகிய இரு தேசங்களிற்கிடையிலான முரண்பாடும் தீபெத்தியப் பிரச்சினையில் பிரதிபலித்தது. இவ்விரு அரசுகளிற்கும் இடையிலான முரண்பாடு, தீபெத்தியர்களை மேலும் பலவீனப்படுத்தத்தான் உதவின. மொத்தத்தில் சீன தேசத்தின் தேசிய ஆதிக்க நலன், இந்திய—சீன தேசங்களுக்கிடையிலான முரண்பாடு, சீன கொம்யூனிஸ்ற் கட்சியின் அதிகார ஆதிக்க நலன், கொம்யூனிச எதிர்ப்பு என்ற அடிப்படையில் அமெரிக்க அரசின் உலகளாவிய நலன், ஆகிய பல அம்சங்கள் தீபெத்தியப் பிரச்சினையில் பிரதிபலித்தன. அந்நிய சக்திகளின் தலையீடு எனக் காரணம் காட்டி, பழம்பெரும் கலாசாரத்தைக் கொண்டுள்ள ஒரு தேசிய இனத்தின் தனித்துவம், மிகவும் பரிதாபகரமாகச் சிதைக்கப்பட்டது. □

## சிவவிழிப்பு

*சிவராத்திரி.*
*எங்கும் சிவவிழிப்பு அனுஷ்டானம்.*
*என் வீட்டார் —*
*சிவவிழிப்பு அனுஷ்டிக்க*
*தியேட்டருக்கு சென்றிருந்தனர்*
*'திருவிளையாடல்' பார்த்துவர.*

*நானே —*
*தனிமையில் விடப்பட்டு*
*தூங்கிப் போனேன்.*
*அன்றிரவு எனக்கு*
*சிவனுர் காட்சி தந்தார்.*

*காலையில் என் வீட்டாருக்கு*
*கனவில் எனக்கு சிவனுர் தோன்றிய*
*காட்சியைச் சொன்னேன்.*
*விழுந்து விழுந்து சிரித்த அவர்கள்.*
*'திருவிளையாடலில்' சிவனுக வந்த*
*சிவாஜியின் நடிப்பை வியந்து கதைத்தனர்.*

— துவிஜன்

# நிகழ்வுகள்

## 1 - 3 - 89 புதன்

மட்டக்களப்பு மாவட்ட எல்லைக் கிராமத்தில் 40 சிங்களவர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக அமைச்சர் ரஞ்சன் விஜேரட்ண இந்திய அமைதிப்படைத் தளபதி ஜெனரல் கல்கட்டைச் சந்தித்துப் பேசினுர்□ புத்தூர் பகுதியில் பயணிகள் வாஞென்றின்மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் 50 வயதான ஒருவர் கொல்லப்பட்டார்□ பருத்தித்துறை இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுக் கொண்டு செல்லப்படுகையில் தப்பமுயன்ற போது சுட்டுக் கொல்லப்பட்டார்□ சாவகச்சேரியை அண்டிய கிராமங்கள் பலவற்றில் முழு அளவில் தேடுதல் நடவடிக்கைகள் இடம் பெற்றன□ வல்வெட்டித்துறையில் அமைதிப்படைக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் மோதல் நடந்தது□

## 2 - 3 - 69 வியாழன்

சமசமாஜக் கட்சித் தலைவர் கொல்வின் ஆர். டி. சில்வாவின் ஈமக்கிரிகைகள் கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் நடைபெற்றன. ஜனதிபதி, வடகிழக்கு மாகாண முதலமைச்சர் உட்படப்பலர் இரங்கலுரையாற்றினர்□ மாங்குளத்திலுள்ள பாண்டியன் குளம் பகுதியில் நேற்றுமுதல் ஊரடங்குச் சட்டம் அமுலிலுள்ளது□ வட பிராந்தியத்துப் போக்குவரத்துச் சபை பஸ் நடத்துனர் ஏ. அன்றா, தான் கண்டெடுத்த 15,000 ரூபா பெறுமதியான நகைகள், பணம் ஆகியவற்றைக் கொண்ட கைப்பையை உரியவரிடம் ஒப்படைத்தார்□

## 3 - 3 - 89 வெள்ளி

வவுனியாவிலுள்ள காட்டுப் பிரதேசத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனுடன் தி. மு. க. எம். பி. யான கோபாலசாமி பேசியது உண்மையே என, மு. கருணுநிதி சென்னையில் ஒப்புக்கொண்டார்□ நாடாளுமன்றத்தின் சபை முதல்வராக அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க நியமிக்கப்பட்டார்□ ஆனைக்கோட்டைப் பகுதி சுற்றி வளைக்கப்பட்டுத் தேடுதல் நடைபெற்றது□ முன்னுள் மன்னர் எம். பி. ஜனுப் எஸ். ஏ. ரஹீம் காலமானுர்□

## 4 - 3 - 89 சனி

புலோலி அமைதிப்படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இளைஞர் ஒருவர் பலியானுர்□ பிரதமர் டி. பி. விஜேதுங்க வெள்ளவத்தையில் இலவச பாலர் பாடசாலை ஒன்றைத் திறந்து வைத்தார். பதவியேற்ற பின்னர் அவர் கலந்து கொண்ட முதல் நிகழ்ச்சி இதுவேயாகும்□ திருமலையில் பாலம்போட்டாறு பகுதியில் கண்ணிவெடியில் ஐந்து கடற்படையினர் பலியாகினர்□

## 5 - 3 - 89 ஞாயிறு

'சாத்தானின் செய்யுள்கள்' நூலிற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் கூட்டமொன்று மருதானை ஸாஹிராக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது□ சீனக் கடலில் 6 சீன மீனவர்களை மோதி மரணத்திற்குள்ளாக்கிய துருக்கிக் கப்பல் கொழும்பில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது□ வவுனியாக் காட்டில் பிரபாகரனைச் சந்தித்ததை, சென்னையில் கோபாலசாமி ஒப்புக்கொண்டார்□ சிறுப்பிட்டிப் பகுதியில் தேடுதல் நடைபெற்றது□

## 6 - 3 - 89 திங்கள்

நாயாறு, அலம்பில் பகுதிகளில் விடுதலைப் புலிகளுக்கும், அமைதிப் படையினருக்குமிடையில் தொடர்ந்தும் கடும் சண்டை நடைபெறுகிறது□ தேர்தற் செலவின் ஒரு பகுதியாக ஒரு வாக்குக்கு 50 சதம் என்ற கணக்கில் த. வி. கூட்டணிக்கு 2 லட்சம் ரூபாவும், ஐ. தே. கட்சிக்கு 16 லட்சம் ரூபாவும், சுதந்திரக் கட்சிக்கு 9 லட்சம் ரூபாவும் அரசாங்கத்தால் வழங்கப்பட்டதாக தேர்தற் திணைக்களம் அறிவித்துள்ளது□

## 7 - 3 - 89 செவ்வாய்

க. பொ. த. ப. சாதாரணப் பரீட்சைக்காக கடந்த வாரம் நாடு முழுவதும் மூடப்பட்ட பாடசாலைகள், இன்று மீண்டும் தொடங்கின□ அர்த்தமற்ற பழிவாங்கும் செயல்கள் எமக்கு அழிவையே தேடித் தரும் என்று 'ரெலோ'வின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது□

## 8-3-89 புதன்

சர்வதேச மகளிர் தினத்தையொட்டி 'பெண்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள்' என்ற தலைப்பில் கருத்தரங்கொன்று யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது□ மாணவர் இளைஞர் பொதுமன்றம் பிரசுரம் ஒன்றை வெளியிட்டது□ கொழும்பு பல்கலைக்கழகத்தின் முன்னுள் உபவேந்தர் ஸ்ரான்லி விஜேசுந்தரா இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார்□ தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரமுகர் எஸ். சம்பந்தமூர்த்தி செங்கலடியில் சுட்டுக்கொல்லப்பட்டார்□

## 9-3-89 வியாழன்

இலங்கையின் 9 ஆவது நாடாளுமன்றம் முதன்முதலாகக் கூடியது□ சபாநாயகராக எம்.எச். முகம்மதுவும், உபசபாநாயகராக நடிகர் காமினி பொன்சேகாவும், எதிர்க்கட்சித் தலைவராக சிறிமாவோ பண்டாரநாயகாவும் தெரிவானுர்கள்□ ஜே.வி.பி. யின் கோரிக்கையினை அடுத்து தென் பகுதியில் ஹர்த்தால் அனுட்டிக்கப்பட்டது□

## 10-3-89 வெள்ளி

பருத்தித்துறைப் பகுதியில் உத்தியோகப்பற்றற்ற ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டது□ நாவலர் வீதி, நல்லூர் குறுக்கு வீதிச் சந்தியில், மாலை 5.45 அளவில் அமைதிப்படை வாக

(12ஆம் பக்கம் பார்க்க)

# பருவந் தவறிய...

(8ஆம் பக்கத் தொடர்ச்சி)

காவல் காக்கும் காவற்காரனுக்காய், அலுவலக விறுந்தையில் ஒரு நீள வாங்கு; ஒரு அலுமாரி; இரண்டொரு கதிரைகள்; இரண்டு சின்ன மேசைகள். எல்லாமே ஈரங்கசிந்து போய் இருக்க முடியாதனவாய் இருந்தன. இரண்டு சின்ன மேசைகளில் ஒரு புதிய மேசை மட்டும் – ஓரளவிற்காயினும் இருக்கக் கூடிய விதமாய் ஒருவிதமான பளபளப்புடன் கிடந்தது. அதிலேறி அழுக்கான சுவர்தான் என்றாலும் அதில் சாய்ந்தான்.

'இப்படி எல்லாம் நடக்கலாமென எதிர்பார்த்திருக்கின்றுன்; நடந்தவைகள் நடந்தவைகளாக இருந்தும் நடக்காதவையாகச் சொல்லப்படுகின்றன; நடக்க முடியாதென்றும் வற்புறுத்தப் படுகின்றன; நம்ப வேண்டிய இடத்திலும் –நம்பிக்கை இல்லாதவர்களென்றும்.......'

ஆளரவமற்ற ஞாயிற்றுக்கிழமைத் தனிமையில் பெய்கின்ற மழை; ஒரு எதிர்பார்ப்பில் கொண்டுவந்திருந்த இலக்கிய இதழைப் புரட்டினுன். விக்கிரமாதித்தியனின் கவிதை வரிகள்—

'எது குறித்தும் எனக்கொன்றும் வெட்கமில்லை;
வெட்கப்பட நானென்றும் குழந்தையில்லை;
வெட்கப்பட வேண்டியதும் நானில்லை;
நான் பெய்யும்மழை; வீசுங்காற்று; எரியும் தீ!
வழங்கும் பூமி; கவியும் வானம்.
இங்கே இடங் கெட்டுக் கிடக்கலாம்;
சூழல் நாறித் தொலைக்கலாம்;
இயல்பு அழிந்திருக்கலாம்;
தன்மை மாறி இருக்கலாம்;
முறைமை திரிந்திருக்கலாம்.
முட்டாள்களுக்கும் முரடர்களுக்கும் மத்தியில்
மூளையையும் மனதையும் முழுதாய்க் காப்பாற்ற
முடியாமல் போகலாம்.......'

மனதைக் கலைத்துக் கண்ணை விழிக்கையிலும் மழை பெய்து கொண்டிருந்தது. நேரம் நல்லாய்ப் போயிருந்தது! அலுவலகத்திற்கு வந்து கிட்டத்தட்ட இரண்டு மணித்தியாலங்களுக்கும் மேலாகி இருந்தது. தூரத்தில் மழையில் குளித்துக் கொண்டிருந்த தென்னை மரத்து ஓலைகள் தெரிந்தன.

மங்கலான மழைக்காலப் பொழுதின் மத்தியான நேரத்துக் கிராமியம். ஒற்றையாய் —சோடியாய் மௌனங் கொண்டு பறக்கின்ற பறவைகள். விட்டின் புகைக்கூண்டினூடாக மெல்ல ஆடிச் செல்லும் புகை வளையங்கள்.

வாயில் புகைவளையங்களோடு எதிர்ப்பட்ட அலுவலகத்து முரட்டு நண்பன், அலுவலகச் சேவகனை ஏசிக்கொண்டேயிருந்தான். சமாதானப்படுத்தியதில் அந்த மழைகால ஞாயிற்றின் மெல்லிய குளிரைப் போலவே சமாதானமாய்ப் போனுன்; பேசிக்கொண்டு, மெல்ல நடந்து வந்து குச்சுக் கடையில் வெறும் தேநீர் அருந்தியதும் மேலும் குளிர்ந்து போனுன்.

'மனிதர்கள் எல்லாரும் நல்லவர்கள் போலத்தானிருக்கிறது. எல்லாரும் வாழ ஆசைப்படுகின்றுர்கள்; எல்லாரும் இன்பமாய் இருக்க விரும்புகிறுர்கள்; எல்லோரும் கனவு காண்கிறுர்கள். பலருமே தம்மைப் பற்றியே, தம் வாழ்வைப் பற்றியே, தம் இன்பத்தைப் பற்றியே நினைப்பதால் தானே துரோகிகளாகவும்...! ...ஏமாற்றுக்காரர்களாகவும்...

என்ன செய்யலாம்?

மழை ஒரே சிராகப் பெய்துகொண்டுதானிருந்தது. நண்பனை அனுப்பிவிட்டு தனியே அறையை நோக்கி நடக்கத் தொடங்கினுன். வீதி, வீதியோரத்துக் கடைகள், தியேட்டர் எல்லாமே வெறிச்சோடிப் போய்க்கிடந்தன. அங்குமிங்குமாய்த் தென்பட்ட இரண்டொருவரும், அந்த மழை நாளில் அப்படி இருப்பதற்காகவே படைக்கப்பட்டவர்களாய்த் தோற்றம் கொண்டார்கள். அவர்களும் அவனைப் போலவே ஏதேதோ அவஸ்தைகளைச் சுமந்துகொண்டு அலைகிறுர்கள் போலும்.

பாரமாய்க் கனக்கின்ற வாராந்திர விடுமுறைகளின் போதும், மதிய உணவின்பின் ஒரு சுகம் இருக்கத்தான் செய்கிறது. 'அப்பாடா' உடம்பை நீட்டி ஒரு குட்டித் தூக்கம் போடுகின்ற சுகம் அலாதியானதுதான். அதுவும் தொடர்ந்து வந்த அதிகாலைத் தூக்கக் கனவுகளின் பின்னல், நாலைந்து நாளாய் பிசுபிசுக்கின்ற மழையுடன் சேர்ந்த ஞாயிற்றுக் கிழமையின் பிற்பகல்.

தூக்கம் கலைந்து எழுந்த போது நாலு மணிக்கு மேலாகியிருந்தது. மழை ஓய்ந்திருந்ததென்றுலும், வானத்தை மூடிக் கவிந்திருந்த மேகக் கூட்டங்கள் கலைந்திருக்கவில்லை. வெளியே போக மனம் ஆசை கொண்டாலும் மழை வந்து பிடித்துக் கொண்டால் என்ன செய்வது என்று பயமாயும் இருந்தது. பார்த்துச்செல்வோமென்று சாய்வு நாற்காலியில் சாய்ந்து கொண்டான்.

முதல்நாள் மழை பெய்த போதும் நண்பன் அறைக்கு வந்திருந்தான். அவனிடம் பேசியதில் பொழுது போனதே தெரியாது போயிற்று. பலதும் பத்துமாய் பேசினுர்கள். மாக்சீயமும் – ஆத்மீகமும் பற்றி, வடதுருவமும் – தென்துருவமுமாய் விவாதித்துக் கொண்டார்கள். விவாதப் போக்கில் 'வளர்த்தால் கொண்டை வெட்டினுல் மொட்டை'என்று நண்பன் சொன்ன பழமொழி பிடித்துப் போயிற்று. பின்னர் அதில் தொற்றி வேறுவேறு எங்கெல்லாமோ போய்.......... இலேசாக உணர்ந்த தலைவலி கூட இல்லாது போயிற்று.

மழை பெய்து ஓய்ந்திருக்கின்ற இன்றுங்கூட நண்பன் வரலாம். வந்தால் பேசிக்கொண்டே இருக்கலாம். 'பேச்சு - பேச்சு' ஒரே பேச்சு. கண்களை உருட்டி நாக்கை நீட்டி பேசுகின்றவர்கள்; ஆற்றெழுக்கெனப் பேசி இடைஇடையே கவர்ச்சிகரமான புன்னகை' வீசுகின்றவர்கள்; கட்டிடம் கட்டுவது போல இடையிடையே கைகளைக் காட்டிக் காட்டிப் பேசி நடிப்பவர்கள்; கண்களை வெட்டி வெட்டிப் பேசி ஜாலம் காட்டுகின்றவர்கள்; பேச்சுக்கள்தான் பின்னர் வினைகளையும் .. ... ... விபரீதங்களையும் ... ... ...

ஒழுங்கையில் 'றக்கு றக்கு' என்று பழைய சைக்கிள் ஒன்று போகும் சத்தம் கேட்டு, நண்பனுக இருக்குமோ என்று சந்தோஷத்துடன் எழுந்து, ஜன்னலால் பார்த்து ஏமாந்து போனுன். மீண்டும் மழைபெய்யத் தொடங்கி விட்டிருந்தது. மழைகாலப் பொழுதுகள் சந்தோஷமானவை தானென்றுலும், ஓயாத இந்த மழை சற்று எரிச்சலைத் தருவதாய் ... ... ...

'சுருங்கனி சுருங்கனி ... ...
தந்தை எனக்கு வைச்ச பேரு;
அஞ்சும் மூன்றும் எட்டு
மெல்ல மெல்ல மேளத்தைத்
தட்டு'

அடக்க முடியாமல் எரிச்சல் கிளம்பிற்று. அறையால் வெளியே வந்து விறுந்தையில் எட்டிப் பார்க்கையில் ரூ இன்வன் பாட்டுக்கு ஏற்ப உடலை வளைத்து ஆடும் நாலைந்து விடலைகள். அவனைக் காணுது; ஒருவரும் இல்லை என்ற சந்தோஷத்தில் குறும்புக் கண்களுடன் ஒருவரை ஒருவர் பார்த்து ஆடும் விடலைகள்.

இந்த விடலைகள் எப்போதுமே தொல்லைதருபவர்கள் தான். அவர்களால் எத்தனையோ காரியங்கள் ஆகின்றன என்றுலும், அவர்களின் அடிகள் நேரான நொய்ந்த ஆத்மாவைத்தானே தாக்குகின்றன. ஒன்றுடன் ஒன்றிப் போக முடியாது தடுக்கும் அரக்கர்கள் அவர்கள். திண்ணைக்குத் திண்ணை வீட்டுக்கு வீடு திரிந்து வம்பளப்பவர்கள். வம்பளப்பதையே தொழிலாகக் கொண்டவர்கள். ஆத்மாவில் அடிப்பதை அறியாதே செய்பவர்கள். அறிந்த பின்னும் அதுபோலவே செய்து துடிக்க வைத்து வேடிக்கை பார்ப்பவர்கள்.

அவர்கள் அவனை கண்டுவிட்டார்கள். ஒருவித பயத்தில் பின்னடைவதுபோல செய்து .. ...

'பாவங்கள் விடலைகள்'

'இரக்கமா? கையாலாகாத்தனமா?'

'இரக்கம்தான் கையாகாலாகாத்தனமா?,

'கையாலாத்தனந்தான் இரக்கமா?'

'அல்லது இரண்டும் ஒன்றுதானு?'

விளங்வேயில்லை; ஒன்றும் விளங்கவேயில்லை.

பருவந் தவறிய இந்த ஓயாத மழையைப் போலவே ஒன்றையும் புரிந்து கொள்ள முடியவில்லை. □

# பெயரளவிலான சுயாட்சி

— வரதராஜப்பெருமாள்

வடக்கு-கிழக்கு மாகாண சபை பெயரளவிலான சுயாட்சி அமைப்பாகவே உள்ளது. இதற்கு இன்னும் உரிய அதிகாரங்கள் வழங்கப்படவில்லை என்று வடக்கு - கிழக்கு மாகாண முதலமைச்சர் அ. வரதராஜப்பெருமாள் டெல்லியில் கூறியதாக 14-3-89 அன்று பி. பி. சி. தமிழோசை அறிவித்தது.

மாகாணசபைக்கு போதிய பஸ் வண்டிகள் இல்லை என்றும், அதற்கென ஒரு அச்சகம் இல்லையென்றும் முதலமைச்சர் கூறியதாகவும் அது மேலும் தெரிவித்தது.

# அணிசேரா நாடுகளின் அமைதிப்படை இங்கு வரவழைக்கப்பட வேண்டும்

— தயான்

இந்திய அமைதிப்படைக்குப் பதிலாக பல நாடுகளைச் சேர்ந்த அமைதிப்படை இங்கு வரவழைக்கப்படவேண்டும்.

வடகிழக்கு மாகாணசபை அமைச்சராகவிருந்து அண்மையில் இராஜினாமாச் செய்த தயான் ஜயதிலகா, ஈ. பி. ஆர்.எல்.எவ். செயலாளர் நாயகம் பத்மநாபாவிற்கு அனுப்பியுள்ள இராஜினாமாக் கடிதத்தில், மேற்கண்டவாறு குறிப்பிட்டிருக்கிறார்.

அணிசேரா நாடுகளின் அமைதிப்படை இங்கு வரவழைக்கப்படுவதே சிறந்த வழி எனக் குறிப்பிடும் தயான், இலங்கையை இராணுவ மயப்படுத்த உதவிய நாடுகளின் படைகளை இதில் தவிர்த்துக் கொள்ளலாம் எனச் சுட்டிக் காட்டுகின்றார்.

இது பற்றி அவர் மேலும் கூறியிருப்பதாவது: அமைதிப் படையே இன்று தமிழ் மக்களுக்கும் இலங்கை இராணுவத்திற்கும் இடையே நிற்கின்றது. இலங்கை இராணுவம் குறித்து தமிழ் மக்கள் அச்சம் கொண்டுருப்பது இயல்பே. ஆனால் இந்நிலை தொடர்ந்தால், ஜே.வி.பி. துரிதமாக வளர்ந்து தென்பகுதி இடதுசாரிகளையும், ஆதரவாளர்களையும் கொன்று குவிப்பார்கள். ஜே. வி. பி. யின் வளர்ச்சி வேகத்தை நோக்கும்போது, தொண்டர் படையும். தமிழ்ப் பொலிசாரும் இலங்கை இராணுவத்தின் தமிழ்ப் பிரிவும் உருவாகி நிலை பெறும்வரை, இந்திய அமைதிப்படை முற்றாக விலகக்கூடாது என்ற கருத்தோடு எனக்கு உடன்பாடில்லை.

வடகிழக்கு மாகாணங்களின் எல்லைகள் மாற்றி அமைக்க வேண்டுமென்றும், கருத்து வாக்கெடுப்பு டிசம்பர் மாதம் வரை பின்போடப்பட வேண்டுமென்றும், தயான் தனது கடிதத்தில் ஆலோசனை கூறியுள்ளார்.

வாக்கெடுப்பு, காலவரையறையின்றி பின்போடப்பட்டால், அது ஜே.வி.பி. செழித்தோங்கி வளர்வதற்கு வழி வகுக்கும் என எச்சரிக்கும் தயான், எல்லைகளை மாற்றியமைப்பது பற்றிக் குறிப்பிடும் போது, சிங்கள மக்கள் பெரும்பான்மையாக வாழும் வவுனியாப் பகுதியை அனுராதபுரத்துடனும், சேருவிலையை பொலநறுவை மாவட்டத்துடனும் இணைக்கலாம் என்று கூறுகின்றார்.

அம்பாறையை மாகாண சபையின் அதிகாரத்துக்கு உட்படுத்தாது அதைத் துண்டிக்க வேண்டுமென்றும், திருகோணமலை நகரத்தைப் பொறுத்த வரை, இரண்டு வழிகள் உண்டு எனவும், தயான் குறிப்பிடுகிறார். ஒன்று, திருகோணமலை நகரை ஐ.நா. சபையின் மேற்பார்வைக்கு உட்படுத்தலாம் அல்லது எவ்வாறு திருகோணமலைத் துறைமுகம் மத்திய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிற்குள் இருக்கிறதோ, அதே போன்று, சிங்கள மக்கள் வாழும் நகர உள்வட்டம் மத்திய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிற்குள் இருக்கலாம்.

முஸ்லிம் மக்களின், குறிப்பாக கிழக்கு மாகாண முஸ்லிம்களின், தனித்துவத்தை காலம் தாமதித்தாவது ஏற்று, அதற்கு ஏற்ப அவர்களுக்கெனத் தன்னாட்சி உரிமையுள்ள பகுதியை வரையறுப்பதற்கு உடன்பட்டமை வரவேற்கப்பட வேண்டிய ஒன்று எனவும், இதைத்தான் தனது குழு ஆரம்பத்திலிருந்து வற்புறுத்தி வந்தது எனவும் தயான் கூறுகின்றார்.

இறுதியாக தயான் கூறுவது எல்லோரினதும் கவனத்திற்குரியது: இப்போது ஆட்சியில் இருக்கும் மாகாண அரசாங்கம் ஓர் காபந்து நிர்வாகமாக தன்னைக் கருதிக் கொள்ள வேண்டும், தனது ஆட்சிக்கால நடுப்பகுதியில் தேர்தல் நடத்துவது பற்றி ஆலோசிக்க வேண்டும். அப்பொழுதுதான் வடபகுதி தமிழர்களின் கருத்துக்களை முழுமையாகப் பிரதிநிதித்துவப் படுத்துவதுடன், கிழக்கு மாகாணத்தில் பிரதிநிதித்துவப்படுத்தப்படாத சிங்கள மக்களின் விருப்பங்களையும் வெளிப்படுத்தலாம். கிழக்கு மாகாணக் குடிமக்களின் வீதத்தினை மாகாணசபை பிரதிபலிக்கச் செய்யும் என மாகாணசபை தேர்தலுக்கு முன்னர் வாக்குறுதி அளிக்கப்பட்டது.

ஆழமான கருத்து வேற்றுமைகளே தயானின் இராஜினாமாவிற்கு வழிகோலிய முக்கிய காரணி என்பதை இக் கடிதம் தெட்டத் தெளிவாக்குகின்றது.

## ஈரோஸ் புரியாத புதிர்

— முதலமைச்சர்

வடக்கு-கிழக்கு மாகாண முதலமைச்சர் வரதராஜப் பெருமாள் ஒரு வார டெல்லி விஜயத்தை மேற்கொண்டிருப்பது அனைவரும் அறிந்ததே.

வடக்கு-கிழக்கு மாகாண நிலமைகள் பற்றியும், மாகாண அபிவிருத்திக்கான நடவடிக்கைகள், உதவிகள் பற்றியும் ராஜீவுடன் பேசுவதற்காக அவர் இந்த விஜயத்தை மேற்கொண்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

அப்போது ஈரோஸ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பகிஷ்கரிப்புப்பற்றி டெல்லியில் பத்திரிகையாளர் கேட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் ஈரோஸ் உறுப்பினர்களின் பகிஷ்கரிப்பு புரியாத ஒரு புதிராக உள்ளதாக, முதலமைச்சர் தெரிவித்தார்.

## பெற்றோரா? அதிகாரிகளா?

அரசாங்கத்தில் வெறுமனே தங்கியிருக்காது, பெற்றோர்கள் தமது பிள்ளைகள் கற்கும் பாடசாலைகளை அபிவிருத்தி செய்யவேண்டும் என்று அரசாங்கமும், உயர் கல்வி அதிகாரிகளும் கூறிவந்தவற்றை 'வேத வாக்'காக கொண்ட காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரி அபிவிருத்திச்சபையின் செயற்குழு உறுப்பினர் ராஜினாமாச் செய்யவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

செயற்குழு உறுப்பினர் ராஜினாமாச் செய்ததின் விளைவாக, காரைநகர் வாழ் பொதுமக்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட ரூபா 60,000/– க்கு மேலான தொகையினை, இக் கல்லூரியின் கல்வி வளர்ச்சிக்காகச் செலவிட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. — ஏனென்றால் புதிய செயற்குழுவைத் தெரிவதற்கான நடவடிக்கைகளை கல்லூரி அதிபரோ, கொத்தணி அதிபரோ இதுவரையும் எடுக்காததால்.

### நிகழ்வுகள்

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

னத்தின் மீது கிரனைட் வீச்சு இடம்பெற்றது□ வட்டக்கச்சியில் அமைதிப்படையின் தேடுதலின்போது மணிவண்ணன் சயனைட் அருந்தி மரணமானார்□

**11-3-89 சனி**

யாழ். இந்துக்கல்லூரி மைதானத்துக்கு அருகில், பிற்பகலில் குண்டுவீச்சு இடம் பெற்றது□. கலிகை— துன்னாலைப் பகுதியில் பெரும் மோதல் இடம்பெற்றது. ஷெல் தாக்குதல்களும் இடம் பெற்றன. பொதுமக்களில் இருவர் மரணமடைந்தனர் □

**12-3-89 ஞாயிறு**

பளைச் சந்திக்கு அண்மையில் மினி பஸ்ஸில் வந்த பயணிகளும், அப்பகுதியில் நின்ற பொதுமக்கள் சிலரும் சூட்டுக் காயத்துக்கு உள்ளானார்கள்□ பயணிகள் பஸ்ஸும் பௌசரும் மோதிக்கொண்டதில் 10 பேர் காயமடைந்தனர். அரியாலைச்குச் சமீபமாக இச் சம்பவம் நடைபெற்றது□

**13-3-89 திங்கள்**

மாலை வவுனியா கதிரேசு வீதியில் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார். ஜுட் நிரஞ்சன் என்ற இந்த இளைஞர் புடொட் இயக்க உறுப்பினர் எனக் கூறப்படுகிறது□

**14-3-89 செவ்வாய்**

வடகிழக்கு மாகாண சபைக்குத் தெரியப்பட்ட முஸ்லிம் கொங்கிரஸ் உறுப்பினர்கள் இன்று பதவிப் பிரமாணம் செய்தனர்□ நகர சுகாதாரப் பிரச்சினைகள் தொடர்பான கருத்தரங்கு யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது□


யாழ். பிரெஞ்சிய நட்புறவுச் சங்கத்தின் ஆதரவில்

செல்வி வாசுகி ஜெகநாதனின்

ஓவிய அரங்கேற்றம்—
கைப்பணிக் கண்காட்சி

இடம்:
Alliance Francaise de Jaffna
130, 1st Cross Street,
Jaffna.

காலம்:
21 - 3 - 89 முதல்
25 - 3 - 89 வரை

தினமும்
9 மணி — 5 மணி வரை

அனைவரையும் அழைக்கிறோம்

A 009


### தமிழரில்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதிகமானோர் கொல்லப்பட்டுள்ளனர். அப்படியென்றால் கணக்கெடுப்பில் அகப்படாத தொகையும் இருக்கக் கூடுமல்லவா?

இந்த மாதத்தில் மட்டும் 3000 இளைஞர்கள் கைது செய்யப்பட்டுக், காவலில் வைக்கப்பட்டுள்ளதாக ஒரு செய்தி கூறுகிறது.

இலங்கை மண்ணுக்கு 'பசளை வகைகளை' இறக்குமதி செய்ய வேண்டிய தேவை இனிமேல் எழாது போலத் தெரிகிறது. ஏனெனில் அந்த அளவிற்கு மண்ணில் இப்போது 'பசளை' ஏறிக்கொண்டிருக்கிறது.

சம்பந்தப்பட்ட சகல தரப்பினரும் இந்தக் கொலைகளைத் தவிர்ப்பது பற்றிச் சற்று யோசிக்க மாட்டார்களா?

### கருத்து வாக்கெடு...

(1ஆம் பக்கத்தொடர்ச்சி)

விட்டால், இரத்தக்களரி ஏற்படும் எனத் தான் அஞ்சுவதாக முஸ்லிம் கொங்கிரஸ் தலைவர் ஜனாப் அஷ்ராப் கருத்துத் தெரிவித்துள்ளார்.

இணைக்கப்பட்ட வட—கிழக்கு என்னும் அமைப்பிற்குள் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக உள்ள சபை ஒன்று நிறுவப்படுவது அவசியம் என, அவர் மேலும் வலியுறுத்தியுள்ளார்.

இந்நிலையில், புதிய ஜனாதிபதி என்ன செய்வார்? குறிப்பிட்ட திகதியில் வாக்கெடுப்பை நடாத்துவாரா அல்லது பின் போடுவாரா?

அவரது முடிவு எதுவாயிருந்தாலும், உள்ளே கனன்று கொண்டிருக்கும் எரிமலை மீது அவர் அமர்ந்திருக்கிறார் என்பது, வெளிப்படை.

பழைய ஜனாதிபதி வினையை விதைத்தார்; வினையை அறுவடை செய்யப்போகின்றவர் புதிய ஜனாதிபதியே.

### தர்மிஷ்ட...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஞச்சு என்பதை மக்கள் அறிவர்.

அப்படியென்றால் "வறுமை ஒழிப்பு" "தர்மிஷ்டத்தை" விஞ்சுமோ?

"வறுமை ஒழிப்பு" ஒருவேளை வெற்றியளித்துவிடும் போலவும், தெரிகிறது. அதாவது இலங்கை முழுவதும், குறிப்பாக தென்னிலங்கையில் இன்று நிகழும் மரணங்களின் தொகையைப் பார்த்தால் வறியவர்கள் ஒழிந்து, இந்நாட்டில் வறுமைக்கு இடமில்லாது போய்விடும் போல் இருக்கிறது.

இப்பத்திரிகை, இல. 118, 4ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணத்திலுள்ள நியூஈரா பப்ளிகேஷன்ஸ் நிறுவனத்தால் 18-3-1989இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது
Registered as a newspaper at the General Post Office, Sri Lanka, Under Q. J. 78/89.